527

ஸம்புடம் 12
ஸஞ்சிகை 11

ஸ்ரீ:

விஜய ௵
கார்த்திகை ௴

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

NOVEMBER [redacted]
VOL 12 NO 11.

210723

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் | பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 338
2. தீபாவளீ 343
[ஸ்ரீ. உப. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலே, மதுராந்தகம்.]
3. கண்ணனும் கவிதார்க்கிகஸிம்ஹமும் 345
[ஸ்ரீ. உப. மாம்பாக்கம் வங்கீபுரம், R. லக்ஷ்மீநாராயணாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலே, மதுராந்தகம்.]
4. பெருமாளும் பிராட்டியும் 348
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் ச. வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]
5. செய்திகள் 350
6. சிறையிருந்தவள் ஏற்றம் 352
[ஸ்ரீ. உப. வித்வான், முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, வைஸ்ப்ரின்ஸூபால், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலே, மதுராந்தகம்.]
7. திருப்பாவைக்கதை 355
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலேதாதாசார்யஸ்வாமி, M. O. L திருப்பதி.]
8. ப்ரணயகலஹம் 359
[ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வித்வான், வில்லிவலம் நாராயணாசார்யஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலே, மதுராந்தகம்.]
9. ஸ்ரீமத்ராமாயணதத்வவிமர்சம் 363
[ஸ்ரீ. உப. வித்வான், கோமல் சேஷாசார்யஸ்வாமி.]
10. மால்கொண்ட மகிழ்மாலேமார்பினன் 365
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
11. ஸ்ரீ அழகியசிங்கரின் பெங்களூர் விஜயம் 367

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்³ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } **விஜய ௵ கார்த்திகை ௴** { **ஸஞ்சிகை 11**

'அஹோபிலே கா³ருட³ஶைலமத்⁴யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதா⁴நம்
லக்ஷ்ம்யா ஸமாலிங்கி³தவாமபா⁴க³ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்³யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்³த்⁴ருதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா³சந்த்³ரதாரகம் ||
ந்ருஸிம்ஹப⁴க்தாநாம் கே³ஹே கே³ஹே ஸதா³ வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போல்வே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाच सिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

‘கோதண்டீ கௌசிகஸ்ய க்ரதுவரமவிதும் லக்ஷ்மணேநாநுயாதோ யாதோ(அ)பூஸ்தாதவாசா முநிகதிதமநுத்வந்த்வசாந்தாத்வகேத:। ந்ருணாம் த்ராணாய பாணைர் முநிவசநபலாத் தாடகாம் பாடயித்வா லப்த்வாஸ்த்ரஜாலம் முநிவநமகமோ தேவ ஸித்தாஸ்ரமாக்யம்॥’

[தேவனே! (நீ) விச்வாமித்ரருடைய உயர்ந்த யாகத்தைப் பாதுகாக்க, உன் தகப்பனாரின் கட்டளையின் பேரில், கோதண்டத்துடன், லக்ஷ்மணன் பின் தொடரப் புறப்பட்டாய். பிறகு அம்முனிவரால் உபதேசிக்கப்பட்ட (பலை, அதிபலை, என்ற) இரு மந்த்ரங்களால் போக்கப்பட்ட வழிக் களைப்புடன், (உலக) ஜனங்களைக் காப்பாற்றவே அம்முனிவரின் கட்டளைப்படி (உன்) அம்புகளால் தாடகையைக் கொன்று, அம்முனிவரிடமிருந்து அஸ்த்ர ஜாலங்களையும் பெற்றுக் கொண்டு, ஸித்தாச்ரமம் என்று பெயர் கொண்ட முனி வநத்தை அடைந்தாய்.]

உலகிலுள்ள சேதநாசேதநங்களைக் காப்பாற்றவே கருணை உருக்கொண்ட ஸ்ரிய:பதியின் விபவாவதார பூதரான ஸ்ரீராமபிரான் உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டு. ‘ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்’ என்று தன்னை தசரத சக்ரவர்த்தியின் பிள்ளையாகிய ஓர் மானிடனாகவே கருதவேண்டும் என்று கூறிய ஓர் உத்தம புருஷன். ஸ்ரீமத் ராமாயண ஆரம்பத்திலும் உலகில் அக்காலத்தில் நற்குணம், வீர்யம், முதலிய உயர்ந்த குணங்களுக்கு எடுத்துக்காட்டாக யாரைக் கூறலாம் என்று கேட்ட கேள்விகளுக்குபதிலாகவேதான் ஸ்ரீராமபிரானின் பெருமை நமக்கு உபதேசிக்கப்பட்டது.

வேதாத்யயனம் செய்த சிஷ்யனுக்கு ஆசாரியன் செய்யும் முதல் உபதேசம் ‘மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்யதேவோ பவ, அதிதிதேவோ பவ’ என்பனவே. இவ்வுபதேசத்தை நன்குணர்ந்த ஸ்ரீராமபிரான் பிதாவினுடைய உத்திரவின் பேரில் விச்வாமித்ரரைப் பின் தொடர்ந்தார். ‘ஸுத: ஹிதகீர்த்தி ஸக்தம்’ என்றபடி கௌஸல்யையும் பர்த்தாவின் கருத்துப்படி ஸ்ரீ[ரா]மபிரானை வழியனுப்பியிருப்பாள். இப்படிப் பெற்றோர்களின் ஆஜ்ஞையை சிரமேற்கொண்டு புறப்பட்ட ஸ்ரீராமன் ஆசார்யஸ்தானத்தில் விச்வாமித்ரரைக் கொண்டு அம்மஹானிடமிருந்து உபதேசங்களையும் பெருகிறார். அவ்வாசார்யோத்தமரின் ஆஜ்ஞைப்படியே தாடகையைக் (பெண் பூதத்தைக்) கொன்றார். ஆசார்யாஜ்ஞையைச் செய்தார் என்பது மட்டுமல்ல. தன்னிடத்தில் சரணடைந்த முனீச்வரர்களையும், இதரர்களையும் பெருந்துன்பத்திலிருந்து விடுவிக்கவே அதிதி ரக்ஷணமாக இவ்வதத்தைச் செய்ய வேண்டியிருந்தது.

‘ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே। அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥’ என்ற ப்ரதிஜ்ஞை செய்த ஸ்ரீராமன் சரணாகத ரக்ஷணத்தைச் செய்தே முடிப்பான் என்பதும் ஸ்ரீராமபிரானின் முதற்கார்யத்தில் புலனாகிறது. இப்படி வேதோக்தமான உபதேசங்களைக் கடைபி

டித்த ஸ்ரீராமபிரானுகிய மாணுக்கனுக்கு கார்யானுகூலம் உண்டாவதில் என்ன ஆச்சர்யம். கார்யானுகூலமென்பது பற்பல உயர்ந்தஅஸ்த்ரங்களைப்பெற்று 'ஸித்தாச்ரமம்' அடைதலே. இவ்வஸ்த்ரங்களோ ஸ்ரீ ராமபிரானுடைய பிற்காலத்தியச் செயல்களுக்கு மிகவும் உபயோகமுள்ளவைகள். வீரனுக்கு வேறு என்ன பலன் வேண்டும். ஸ்ரீராமபிரானின் எல்லாக் கார்யங்களும் நற்பலனுடன் கூடியதாகவே முடியும் என்பதைக் குறிக்கிறதல்லவா 'ஸித்தாச்ரம ப்ராப்தி'. இவ்வாச்ரமம் பெரிய பெரிய மஹான்கள் அவதரித்து, வஸித்த க்ஷேத்ரமல்லவா. இம்மாதிரியான க்ஷேத்ர தர்சனமே ஓர் பெரிய அதிர்ஷ்டமும், நற்சகுனமுமல்லவா. ஸ்ரீ ராமபிரானுடைய வீரச் செயல்களையும், லோகோபகாரமான கார்யங்களையும் சுருக்கமாகவும், அழகாகவும் எடுத்துரைத் திருப்பதை நாம் படித்து அநுபவிக்கிறோம்.

* * * * *

25-10-1953 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43—வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஸடகோப ஸ்ரீவீரராகவஸடகோபயதீந்த்ரமஹாதேசிகன்பெங்களூருக்கு எழுந்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸஞ்சாரம்

ஸநாதநதர்மத்தில் தலைசிறந்தது மைஸூர் அரசாங்கம். மைஸூர்மஹாராஜாக்களெக்காலத்திலும் வேதோக்தமான தர்மாநுஷ்டானங்களை அநுஷ்டிப்பவர்களும், அநுஷ்டிப்ப வர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களும் ஆவார்கள். இச்சிறப்பு தெற்கே திருவாங்கூர் கொச்சி ராஜ்யங்களிலும் காணப்பட்டபோதிலும், மைஸூரில் உள்ள அளவு இதர இடங்களில் கிடையாது. இப்பொழுதும் வழக்கத்துக்கொப்ப ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் ஒப்பற்ற மதத்தலைவரான ஸ்ரீமதழகியசிங்கருக்கு மைஸூர் அரசாங்கம் அமோகமான வரவேற்பு அளித்திருப்பது மைஸூர் சரித்திரத்திற்கு ஒப்பானதே. ஸ்ரீமதழகியசிங்கர் பங்களூர் எழுந்தருளியவுடன் பெங்களூர்நகரமேயர், கமிஷனர் ஜில்லாமாஜிஸ்ரேட் முதலிய அதிகாரிகள், பல தனிகர்களாகிய ஆஸ்திகர்கள், பல வெளியூர் ப்ரமுகர்கள் எல்லோருமாக ஸந்நிஹிதர்களாகவிருந்துவெகு குதூஹலத்துடன் வரவேற்பளித்தனர். ஸ்ரீ அழகியசிங்கரை திருவீதிஊர்வலமாக (ஸர்வதோமுகமாக) எழுந்தருளப் பண்ணினர்கள். இது ஒரு விசேஷமான மரியாதை யல்லவா. துளசிதோட்டத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிருந்தது. நவம்பர்மீ 11வ வரை பெங்களூரில் எழுந்தருளியிருந்தார்கள். அங்கிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஆதிவண்ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவவதார ஸ்தலமாகிய திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளியாகிறது. இன்னும் ஒருவாரம் அல்லதுபத்து தினங்களில் திருநாராயணபுரம் எழுந்தருளியாகும்.

* * * * * * *

ஸ்ரீ ஆதிவண்ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அவதாரஸ்தலம் திருநாராயணபுரம்.

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ப்ருந்தாவனம்

திருநாராயணபுரத்திலேயே ஸ்ரீ ஆதிவண்ஸடகோபயதீந்த்ர மஹாதேசிகன் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியதாகத் தெரிகிறது. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விசேஷாநுக்ரஹத்திற்கு விஷயபூதரான ஸ்ரீ ஆதிவண்ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் இப்பாரத நாட்டில் ஓர் பெரிய ஸ்ரீவைஷ்ணவ மடத்தையும் ஸ்தாபித்தருளினர். பிறகு கன்யா குமரி முதல் பத்ரிகாச்ரமம் வரை ஸஞ்சாரமாக எழுந்தருளியிருந்து சிஷ்யர்களை அநுக்ரஹித்தருளியாயிற்று. அப்பேர்ப்பட்ட ஓர் மஹான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளிய இடத்தில் ஓர் ப்ருந்தாவனம் செம்மையாக பரிபாலிக்கப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

நவீன காலத்தில்கூட காலஞ்சென்ற பல பெரியோர்களின் ஞாபகார்த்தமாக அவர்கள் உபயோகித்த ஸாமான்களையும், அவர்கள் வசித்து வந்த இடங்களையும், மரணத்திற்குப் பின் அடக்கம் செய்யப்பட்ட இடங்களையும் பெரிய பூஜ்ய வஸ்துக்களாகவும், புண்ய க்ஷேத்ரங்களாகவும் கொண்டாடுவதை நாம் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். உலகிலுள்ள மானிடர்களை நமஸ்கரிப்பதும், ஆலயங்களில் வைத்துபஜிப்பதும் அறவே ஒழிக்கப்படுதல் வேண்

டும் என்று கோஷமிடும் பெரியோர்களும், இக்கருத்தை அடிப்படை தத்வமாகக்கொண்ட பிறசமயிகளுங்கூட இக்காலத்தில் இம்மாதிரியான வழிபாடுகளையும் ஒரு சிலர் விஷயத்தில் அதிக ஊக்கத்தைக்காட்டி வருவதை நாம் தினமும் நேரில் பார்த்தும், கேட்டும் வருகிறோம். இப்படி யிருக்க ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்தினரின் ஆத்மோஜ்ஜீவனத்திற்காகப் பாடுபட்ட ஓர் மஹானுடைய ப்ருந்தாவனம் அநாதரிக்கப் படுவது எவ்வளவு வெறுக்கத் தக்க விஷயம்! வைதிக ஸம்ப்ரதாயத்தில் ஆஸ்தையுள்ளவர்களும், ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்களும் வெகு உத்ஸாஹமாக முன் வந்து இம்மஹானுடைய ப்ருந்தாவனத்தை அழகான வகையில் புதிப்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் தன் சிஷ்யர்களின் நன்மையைக் கருதி பல அரிய க்ரந்தங்களைச் செய்தருளினார் என்றும் கால வசத்தினால் அவைகள் லுப்தமாயினவென்றும் பல பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுள்ளோம். தவிர அம்மஹான் அறுபது க்ரந்தங்களைச் செய்தருளியதாகவும் அதையநுஸரித்தே அந்த ஸ்வாமியின் வழி வந்த இரண்டாவது ஸ்ரீஅழகியசிங்கரும் அறுபது ப்ரபந்தங்களைச் செய்தருளினார் என்றும் சில பெரியோர்கள் அபிப்ராயம் கூறியிருக்கிறார்கள். இப்படி பெரியமஹான்களின் க்ரந்தங்களைத்தேடிப் பிடிப்பதும், அம்மஹான்களின் ஜ்ஞாபகச் சின்னங்களைக் காப்பாற்றுவதும் நமது முக்யமான கடமை என்பதை நம் ஆப்தர்களுக்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

* * * * * * *

மதஸ்தாபனங்களும் தர்மங்களும்

இப்பாரதபூமியின் பெருமைக்குக் காரணம் அதன்ப்ராசீனர்கள் ஆத்மீகவளர்ச்சியில்உத்க்ருஷ்டநிலையையடைந்தார்கள் என்பதே. புராதந நாடுகள் எல்லாம்அப்படியேதான் உயர்வை அடைந்திருந்தன. ஆத்மீகத் தேற்சி பெற்றவர்களெல்லோரும் நாட்டிலுள்ள மக்களின் வாழ்வை முக்யமாகக் கருதி அவர்கள் நல்வாழ்வு நடத்துவதற்சேற்ப வழிகளை வகுத்துக் கொடுத்தனர். இப்படி நல்வழிகளை வகுக்குங்கால் நல்லவைகளை தர்மங்களென்றும், தீயவைகளை அதர்மங்களென்றும் பாகுபாடு செய்தனர். தர்மங்களைப் பின்பற்றி மக்கள் இன்புற்றிருக்கவும், அதர்மங்களை நீக்கி அமைதியை நிலை நாட்டவும் பாடுபட்டனர். இம்மாதிரி நம் ஸமூஹத்தின் முன்னேற்றத்திற்கும், ஆத்மீக வளர்ச்சிக்கும் பாடு படவுமே பெரிய மதஸ்தாபனங்கள் தோன்றின. ஒவ்வொரு மதஸ்தாபனமும் தன்நிலைமைக்கு ஒப்ப தங்கள் வழி வந்தவர்களைக் காப்பாற்றித்தான் வந்திருக்கிறது. இப்பொழுதும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. நம் ஸமூஹத்தில் அறிவு வளர்ச்சியின் காரணமாக பல பாகுபாடுகள் தோன்றியிருக்கின்றன. புராதன இலக்கண, இலக்கியங்களை ஒப்புக் கொண்ட எல்லோரும் அறிவு பெருக்கின் காரணத்தால்புராதன இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்களில் வேற்றுமை அபிப்ராயங்கள் கொண்டுள்ளனர். இதன் விளைவாக பல்வேறு பிறிவுகள் நம்மிடையே காணப்படுகின்றன. இப்பிறிவுகளின் காரணமாக பற்பல மதஸ்தாபனங்களும் தோன்றின. ஒவ்வொருஸ்தாபனமும் தன்கொள்கைகளுக்கு உவப்ப பலதர்மங்களைச் செய்து வருகிறது.

ஆத்மீக வளர்ச்சி நம் அறிவு வளர்ச்சியால் ஏற்படுகிறது. அறிவு வளர்ச்சி ப்ராசீன இலக்கண, இலக்கியங்களை நன்கு படிப்பதால் உண்டாகிறது. நம் மதத்திற்கு அடிப்படை புராதனமான ஸம்ஸ்க்ருத வேதங்கள். இவ்வேதங்கள் நம்முடைய ஆத்மோஜ் ஜீவனத்திற்சாக ஸ்ரிய:பதியான நாராயணனால்நமக்குக்கொடுத்து உதவப்பட்டவை. நாளடைவில் இவைகளைப் பின்பற்றி ‘வேதம் தமிழ் செய்த மாறன்’ என்ற நம்மாழ்வார் போன்ற ஆழ்வாராசார்யர்கள் த்ராவிட வேதத்தையும், மற்றய உயர்ந்த க்ரந்தங்களையும் நமக்குக் கொடுத்து தவினார்கள். ஆக இவ்வுயர்ந்த வேதங்களையும், அவைகளை விஸ்தரித்தும் எடுத்துக்காட்டியும் உபகரிக்கும் புராணங்களையும் அவைகளைப் பின்பற்றி வந்த ஆசார்யர்களுடைய க்ரந்தங்களையும் நாம் படித்தறிய வேண்டிய தவசியமாயிற்று. இவைகளை அறிய ஸாமான்ய மொழிப்பயிற்சி மிகவும் அவசியமாகிறது. இப்படி நம் ஸமூஹத்தின் முன்னேற்றத்திற்கு நம்சிறுபிள்ளைகளின் கல்விமிகவுமவசியமாகிறது. கல்விதான் முதன்மையான இடம் பெறவேண்டியிருக்கிறது. இதை மனத்

திற் கொண்டுதான் தத்காலம் ஸ்ரீமதழகியசிங்கர் ஓர் சல்வித்திட்டத்தை ஆதரிக்க முன் வந்துள்ளார். ஸாதாரணமாக அரசாங்கத்தாரால் ஆரம்ப பள்ளிக்கூடங்கள் ஐந்து வருஷங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுவும் ஸமீபத்தில் ஏற்பட்ட மாறுதலால் இப் பள்ளிக்கூடங்கள் பாதி நாளே வேலை செய்கின்றன. இப்படியாக ஐந்து வருஷங்கள் நடக்கும் வகுப்புகளில்கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை மூன்று வருஷங்களில் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மூன்று வர்ஷங்களில் பிள்ளைகள் ஆரம்ப பள்ளிக்கூட பாடங்களைப் படித்தறிய முடியும் என்று பல அறிவாளிகள் கூறுவதையும்நாம்கேட்டிருக்கிறோம். இத்துடனிப் புதிய பாடசாலைகளில் மதக்கல்வியும் போதிக்கப் படும். வடமொழி, ஹிந்தி முதலிய மொழி போதனைகளும் உண்டு. ப்ராசீன புராணங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அறிவு வளர்ச்சி தரக்கூடிய கதைகளும், கடவுள் ஸ்தோத்ர பாடல்களும் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும். இலக்கியப் படிப்பு மட்டிலன்றி நன்னடத்தை, ஒழுக்கம், குணம் இவைகளிலும் பயிற்சியளிக்கப்படும். இப்படியாக ஸ்ரீமதழகியசிங்காராலாரம்பிக்கப்பட்ட ஆரம்ப பாடசாலைகள் உண்மையாகவே நம் ஸமூஹத்தின் பிள்ளைகளுடைய அறிவு, படிப்பு, குணப் பயிற்சி, ஆத்மீகப் பயிற்சி இவை போன்ற உயர்ந்த நோக்குகளுக்கு ஆரம்பங்களாகவே திகழ்கின்றன. நாளடைவில் தேற்சி பெற்ற ஸ்தாபனங்களாகும் என்பதில் ஸந்தேஹமில்லை. இம்மாதிரியான ஸ்தாபனங்களிலிருந்து வெளிவரும் பிள்ளைகளும் நம் ஸமூஹத்தின் மதப் பயிற்சி பெற்று, ஸமூஹத்தின் நல்வாழ்வுக்கும் காரணமாவார்கள் என்பதும் நிச்சயம்.

இம்மாதிரியான ஓர் கல்வித்திட்டத்தை இவ்வர்ஷம் சிலவிடங்களிலேயே ஆரம்பித்திருக்கிறோம். இன்னும் விஸ்தரித்தால் அதற்கு ஏராளமான த்ரவ்யம் வேண்டியிருக்கும். பல பெற்றோர்களின் ஒத்துழைப்பும், தனிகர்களின் பூர்ண ஆதரவும் அவசியம் தேவையாகும். வேண்டிய அளவுக்கு மேலேயே ஒத்துழைப்பு கிடைக்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

ஸமீபகாலத்தில் மதஸ்தாபனங்களிலிருந்து பலவித தர்மங்களை நடத்த உதவி வேண்டுமென்று பல பெரியோர்கள் சொல்வதை நாம் கேட்கிறோம். அது மிகவும் உண்மையான விஷயமே. நாம் பரிபூர்ணமாக அக்கருத்தை ஆதரிக்கிறோம். தர்மங்கள் பலவிதம். கல்வி போதிப்பது ஒன்று. 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பது மூதுரை. அன்னதை விடுதிகள் கட்டிப் பரிபாலிப்பது, சத்திரங்கள் கட்டுவது, ஆஸ்பத்திரிகள் கட்டி உதவுவது, ஆலயங்களையும் அறநிலையங்களையும் கட்டி ஸமூஹத்தினரைக் காப்பாற்றுவது, அறநூல் நிலையங்களை ஏற்படுத்தி ரக்ஷிப்பது, பலசொற் பொழிவாளர்களை நியமித்து நம் போன்றவர்களுக்கு தர்மங்களை எடுத்துக்கூறும்படி செய்வது இப்படி பலவிதமான தர்மங்களைச் செய்ய வேண்டியது மிகவும் அவச்யமே. ஆனாலும் ஒவ்வொரு மதஸ்தாபனமும் இவ்விதமான தர்மங்கள் எல்லாவற்றையும் ஏக காலத்தில் மேற்கொண்டு ஸரிவரநடத்தமுடியும் என்று நினைப்பது ஸரியல்ல. ஒவ்வொரு மதஸ்தாபனத்திற்கும் வருவாய் ஒருகுறிப்பிட்ட அளவுதான் உண்டு. அவ்வருவாய்க்குத் தக்கபடி தான் சிற்சில தர்மங்களில் பங்கெடுத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு மதஸ்தாபனமும் ஒவ்வொருவிதமான தர்மத்திலீடுபட்டால் மொத்தத்தில் தேசத்தின் நன்மைக்கும், தர்மஸ்தாபனத்திற்கும் பாடுபட்டதாகவே முடியும்.

ப்ரக்ருதம் தானதர்மங்களில் முதன்மையானது வித்யாதானமானபடியாலும் கல்விதான் எல்லாவற்றிர்க்கும் அடிப்படையானதாலும் கல்வித்திட்டத்தை முதலாவதாக நம் ஸ்ரீ ஸந்நிதி எடுத்துக்கொள்ளும்படி நேர்ந்தது. இதை ஸரிவர விஸ்தரிப்பதற்கே ஏராளமான பொருள் தேவையாகிறது. இதை ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொண்டு மற்றைய தர்மங்களைப் பற்றி திட்டமிட ஆரம்பிக்கலாம். இப்பொழுதே அன்பர்களில் சிலர் வைத்திய சாலைகள் வைக்க வேண்டுமென்றும், தர்மப்ரசாரகர்களை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், நூல் நிலையங்களை நிறுவ வேண்டுமென்றும் கடிதங்கள் பல எழுதுகிறார்கள். அவர்களுடைய அபிப்ராயங்களை பூர்ணமாக நாம் ஆதரிக்கிறோம். வரவேற்கிறோம் கூட. ஆனால்

இப்பொழுதே அம்மாதிரியான பல திட்டங்களையும் ஆரம்பிப்பது என்பது நமது பொருளாதார நிலைமையை நன்கு உணராமல் செய்வதாக முடியும். ஆதலால் நிதானித்து ஒவ்வொன்றாகத்தான் ஆரம்பிப்பதுதான் உசிதமாகும் நாளடைவில் வ்ருத்தியடையவும் கூடும்

* * * * * * *

ஏற்கனவே கூறியபடி நம் ப்ராசீன ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஸம்ரக்ஷிப்பதும், படித்தறிய ஆவலுள்ளவர்களுக்குக் கிடைக்கும்படி செய்வதும் முக்ய கார்யங்களே.

ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்

இதையனுஸரித்து நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத் தலைவர்களான ஸ்ரீபாஷ்யகாரருடையவும், ஸ்ரீவேதாந்ததேசிகன் போன்றவர்களுடையவுமான க்ரந்தங்களை மூலமாகவோ, வ்யாக்யாநங்களுடனே அச்சிடவேண்டுமென்ற திட்டம் ஒன்று தயாராகி ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யநியமனத்தின் பேரில் அச்சிட ஆரம்பமும் ஆகியிருக்கிறது. ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யாநுக்ரஹத்தாலும், ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனின் கடாக்ஷ விசேஷத்தினாலும் மேற்படி கைங்கர்யங்கள் விரைவிலேயே பூர்த்தியாகுமென்று எதிர்ப்பார்க்கிறோம்.

* * * * * * *

நம் போன்ற ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்கள் ஸ்ரீ ஸந்நிதிக்குச் செய்யவேண்டிய கடமைகள் பல உண்டு.

ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்களின் கடமை

ஸ்ரீ ஸந்நிதியின்நிர்வாஹத்துக்காக பெருமாளுக்கு வேண்டிய ஐச்வர்யஸம்பத்து இருந்துகொண்டிருந்தபோதிலும் மேன்மேலும் பலதர்மகார்யங்களைச் செய்வதற்கு சிஷ்யர்கள் உதவியே ஆகவேண்டும். சில ஸம்ப்ரதாயஸ்தர்கள் ப்ரதிவர்ஷமும் தங்கள் வருவாயில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தங்கள் ஸம்ப்ரதாயத்தலைவருக்கோ, மடாதிபதிக்கோ காணிக்கையாகக் கொடுத்து வருவதை இக்காலத்தில்கூட நாம் பார்க்கிறோம். சில ஸமயங்களில் இப்பழக்கம் நிர்பந்திக்கப்படுவதாகக்கூட கேள்விப்படுகிறோம். ஆனால் நம் ஸம்ப்ரதாயத்தில் இப்பழக்கம் கிடையாது. ஆஸ்திகர்களாகிய சிஷ்யர்கள் தாங்களாகவே ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யங்களில் ஈடுபடுவதை நாம் பார்த்து ஸந்தோஷிக்கிறோம். ஆனால் இம்மாதிரி ஆசார்யகைங்கர்யங்களில் அன்வயிப்பவர்களின் எண்ணிக்கைமிகவும் குறைவு. சரீரப்ரயாசையினாலோ த்ரவ்யரூப கைங்கர்யத்தாலோ இம்மாதிரி ஸத்விஷயங்களில் ஈடுபடுபவர்களை விரல்விட்டுஎண்ணிவிடமுடியும். ஸாமான்யமாக பலர் ஆஸ்திகர்களானபோதிலும் எல்லோரும் தங்களால் முடிந்த த்ரவ்ய ஸஹாயமும் செய்ய முன்வரவேண்டுமென்பதை நாம் உணரவேண்டும்.

உதாரணமாக ஸ்ரீ ஸந்நிதி நிர்வாஹத்தில் உள்ள ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையை என் ஒவ்வொரு சிஷ்யரும் வாங்க முன்வரவில்லை என்று யோசிக்கவேண்டும். பல ஸாமான்ய பத்ரிகைகளை வாங்குவதில் ஆர்வமுடையவர்கள் பணச்செலவைக் கருதுவதில்லை. ஆனால் மாதம் நான்கணா வீதம் வருஷத்துக்கு மூன்று ரூபாய் மாத்ரம் சந்தாவாகக் கொடுத்து உதவ வேண்டிய ஸஞ்சிகையை ஒவ்வொரு ஸ்ரீஸந்நிதி சிஷ்யனும் வாங்குவதற்கு தயங்கக் கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் உள்ள ஒவ்வொரு ஸ்ரீஸந்நிதி சிஷ்யரும் உடனே தங்கள் விலாஸத்தைத் தெரிவித்து சந்தா தொகையை அனுப்பி ஸஞ்சிகைகளைப் பெருவார்கள் என நம்புகிறோம்.

ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்கள் ஸ்ரீ ஸந்நிதிக்குச் செய்யவேண்டிய கடமைகளில் இது ஒன்று. ஆனால் இதர ஸ்ரீவைஷ்ணவர் இப்படியே ப்ரார்த்திக்கப் படவில்லை என்று எண்ணக்கூடாது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கே பாடுபட்டு வரும் ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யத்தில் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும்பங்கெடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவச்யம். அதில் முக்யமாக சிஷ்யர்களுக்கு விசேஷப் பொறுப்பு. மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸாமான்யப்பொறுப்பு. எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஆதரவையும் நாம் எதிர்ப் பார்க்கிறோம். ஒத்துழைப்பார்கள் என்றும் நம்புகிறோம். அதனால் ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபைக்குப்பாத்ரபூதர்களாக ஆவதுடன் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷத்தினால் ஐஹிக, ஆமுஷ்மிக ஸுகங்களை அடைந்து இன்புற்றிருப்பார்களாக.

ஸ்ரீ:

தீபாவளீ

நம்மால் அநுஷ்டிக்கப்படுகிற பல பண்டிகைகளில் தீபாவளீ பண்டிகை என்பதும் ஒன்று. இது தென்தேசத்தில் ஒரு நாளும் வடதேசத்தில் மூன்று நாளும் கொண்டாடப் படுகிறது. இந்தப் பண்டிகை ஐப்பசி மாதத்தில் க்ருஷ்ணசதுர்த்தசியில் அநுஷ்டிக்கப்படுகிறது. தீபாவளீ என்கிற வாக்யத்திற்கு தீபங்களின் (விளக்குகளின்) வரிசை என்று பொருள். பகவானுடைய ஸங்நிதியில் நிறைய விளக்குகளையேற்றிவைத்துப் பகவானை ஆராதிப்பதே தீபாவளி பண்டிகை என்று ஒருவாறு கூறலாம். ஆனுல் இத்தேசத்தில் தீபாவளி தினத்தில் விடியற்காலை 5 மணிக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து புதிய வஸ்த்ரங்களைத் தரிப்பது மாத்ரமே யநுஷ்டிக்கப்படுகிறது. வடதேசத்தில் இப்பொழுதும் நிறைய விளக்குகளையேத்திவைத்து இந்தப் பண்டிகையைக்கொண்டாடுகிறார்கள். தென்னிந்தியாவில் நிறைய விளக்கேற்றி பகவானுக்குத் தீபாராதனம்செய்வதுகார்த்திகைமாதத்தியபௌர்ணமியில்தான். ஆகையால்தான் கார்த்திகை பண்டிகைக்கு 'க்ருத்திகா தீபோத்ஸவம்' என்று சாஸ்த்ரஜ்ஞர்களின் வ்யவஹாரம். இந்தத்தீபாவளிப் பண்டிகை ஏன் ஏற்பட்டது? எதற்காகக் கொண்டாடவேண்டும்? என்று சிலருக்கு சங்கை உண்டாகக்கூடும்.

சேதனர்கள் நல்ல கதியை யடையும்பொருட்டு பகவான் பரமக்ருபையால் அநேக புண்ய தீர்த்தங்களையும், க்ஷேத்ரங்களையும் ஸ்ருஷ்டித்தவைகளின் மஹிமைகளை ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் மூலமாக வெளியிட்டருளினுன். அதை நாம் ஸ்ம்ருதி, புராணங்கள் மூலமாக அறிந்து அவைகளிருக்குமிடத்தைத் தேடி அடைந்து ஸ்நானத்தைச் செய்தும் ஸேவித்தும் புண்யத்தை யடைகிறோம். இப்படிச் சில தீர்த்தங்களுக்கும் க்ஷேத்ரங்களுக்கும் ஏற்றமுண்டானதுபோல சில காலங்களுக்குமேற்றமுண்டாயிற்று. உதாஹரணமாக அர்த்தோதயம், மஹோதயம், துலாகாவிரிஸ்நானம் முதலியன. அதுபோல் நரகசதுர்த்தசி என்னும் தீபாவளிதினத்தின் ப்ராத:காலமும் ஒரு புண்யகாலமாகும். இதைக் கொண்டாடுவதற்குப் பிரமாணவசனங்களை இங்கு விஜ்ஞாபித்துக்கொள்கிறேன்.

இந்தப்பண்டிகைதினமாகிய சதுர்த்தசிக்கு நரகசதுர்த்தசிஎன்றுபெயர்வந்த காரணத்தை குறிப்பிடுகிறேன். முன்னொரு காலத்தில் மஹாபாபியாயும், பலவானுயும் நரகாஸுரன் என்று பெயர்கொண்ட அஸுரன் ஒருவன் இருந்து வந்தான். அவன் விஷ்ணுவின் வராஹாவதாரஸமயத்தில் பூமியை ஸமுத்ரத்திலிருந்து எடுத்துவந்த காலத்தில் பூமிதேவிக்கு விஷ்ணுவின் ஸ்பர்சத்தினுல் உண்டானவன் என்பது '[illegible]॥' ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் 5-வது அம்சத்தில் 29-வது ச்லோகத்தினுல் அறிகிறோம். நரகாஸுரவ்ருத்தாந்தம் அநேக இடங்களில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் ப்ரபலப்ரமாணமான ஸ்ரீவிஷ்ணுபுராணமே முக்ய ஆதர்சமாக கையாளப்படுகிறது. பூமியின் புத்ரனுன நரகாஸுரன் ப்ரஹ்மாவை ஆராதித்து அநேக வரங்களைப் பெற்று அதிகர்வமடைந்தவனுய் ப்ராக்ஜோதிஷம் என்ற பட்டணத்தை ஆண்டுவந்தான். அவன் தேவர்களையும், ப்ராஹ்மணர்களையும் ஹிம்ஸித்துக்கொண்டும் தேவேந்த்ரனுடைய குடை, குண்டலங்களைப் பிடுங்கிக்கொண்டும் ஸாதுக்களை உபத்ரவித்துக்கொண்டும் வந்தான். இப்படியிருக்கையில் தேவேந்த்ரன் முதலியவர்கள் ஸ்ரீக்ருஷ்ணபகவானிடம் சென்று தம் கஷ்டங்களை முறையிட்டுக்கொண்டு அவனைக் கொல்லும்படி ப்ரார்த்தித்தனர். '[illegible]॥' என்று.

'[illegible]

உாழ। ஸதுஹாஶாo ஸஶாஶோவு யயள ப்ராக்ஜ்யாதிஷo வாாழ॥'

[உடனே ஸ்ரீக்ருஷ்ணபகவானும் அவர்களுடைய ப்ரார்த்தனையைத் திருவுள்ளம் பற்றி ஸத்யபாமையுடன் கருடன்மீதேறி ப்ராக்ஜோதிஷமென்கிற பட்டணத்திற்கு வந்துசேர்ந்தார்.]

பிறகு ஸ்ரீக்ருஷ்ணபகவான் ப்ராக்ஜோதிஷமென்கிற பட்டணத்தைச் சுற்றியுள்ள மலைக்கோட்டை, ஆயுதக்கோட்டை, ஜலக்கோட்டை முதலிய கோட்டைகளைத் தகர்த்தெறிந்து நரகாஸுரனுடைய ஸேனைத்தலைவனான முரனென்னும் அஸுரனைக் கொன்றார். அதுமுதற்கொண்டு பகவானுக்கு முராரி என்றபெயருண்டாயிற்று. பிறகு நரகாஸுரன் தன் ஸேனாதிபதி இறந்துவிடவே வேறு வழியில்லாமையால் தானே நேரில் வந்து யுத்தம் செய்ய பகவானும் சக்ராயுதத்தினால் அவன் தலையை அறுத்து அவனைக்கொன்றார். அவனைக்கொன்றதினம்ஐப்பசி மாதத்தியக்ருஷ்ணசதுர்த்தசியாதலால் அன்றையதினத்தை எல்லோரும் பண்டிகையாகக் கொண்டாடும்படி நரகாஸுரனின் தாயான பூமிதேவியானவள் ஸ்ரீக்ருஷ்ணபகவானைக்கேட்கவே அவரும் 'அப்படியேயாகுக' என்று வரமளித்தார். ஆகவே அதுமுதல் அன்றையதினத்திற்கு நரகசதுர்த்தசி என்று பெயர். ஷுஜதுய‐ிஹாஶெ‐யஸாo ஹுஜத ஸுதுஶுஷ‐ிஶாo விஷுணா நரகொ நிஶி। தஸாஶஹுஜநo கூாய‐ிo நஶெநஶநரக வீஶஹிஃ॥' [எந்த சதுர்த்தசியினிரவில் நரகாஸுரன் விஷ்ணுவினால் கொல்லப்பட்டானோ அன்றையதினம் நரகத்தில் பயமுள்ளவர்கள் எண்ணெய்தேய்த்து ஸ்நானம்செய்யவேண்டும்] என்று தைலஸ்நானம் பண்ணவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

ஸுஶயா ஸ்ஷதெஹொzவி ப்ராயஶ்சித்தீயதெ ஆஜஃ। ப்ராதரஹுகதமாதுஸு நிஷ்க்ஷுஜதிநெந‐ிவ விஶுதெ॥' [கள் என்கிற வஸ்துவின் ஸ்பர்சம் ப்ராஹ்மணனுக்கு ஏற்பட்டாலும் ப்ராயச்சித்தம் உண்டு. ஆனால் விடியற்காலையில் எண்ணெய்த்தேய்த்துக்கொள்ளுகிறவனுக்கு ப்ராயச்சித்தமே கிடையாது] என்கிற வசனத்தினால் தீபாவளிதினத்தில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது நிஷித்தமாகாதோ வென்கிற சங்கைக்கு ஸமாதானம் ஸ்ம்ருதிரத்நாகரமென்கிற தோழப்பர் க்ரந்தத்தில் 'கூயo நிஷெயஃ நரகுவதுஶுஷ‐ிஶீவு திரிகது விஷயஃ। ப்ருதுஶிஷெ சுஶுயாஶூஶெஶ‐ி வதுஶுஷ‐ிஶாஶீநெரஷயெ। ஸ்நாநஹெஜு கூத‐ிவுo நரெநநரகவீஶஹிஃ॥' என்றுகூறப்பட்டிருக்கிறது. இந்த நிஷேதமானது ஸாமாந்யவிஷயமாதலால் தீபாவளிதினத்தன்று எண்ணெய்த்தேய்த்துஸ்நாநம் செய்யவேண்டும் என்கிற வசனம் ப்ரபலமாகையினாலே அதை பாதிக்காது. தீபாவளிதினத்தன்று எண்ணெயில் லக்ஷ்மிதேவியும், ஜலத்தில் கங்காதேவியும் வஸிக்கிறதாக ப்ரமாணம் கூறுகிறபடியால் தாரித்ர்யநாசத்திற்காக தீபாவளிதினத்தின் விடியற்காலையில் எண்ணெய் தேய்த்துஸ்நானம் செய்து புதுவஸ்த்ரங்களைத் தரிக்கவேண்டுமென்று ஸ்ம்ருத்யர்த்தஸாரஸங்க்ரஹத்தில்

'தெலெ லக்ஷ்மீஜ‐ிலெ ஗ங்கா தீவாவஸிதிநெ வஸெக। அலக்ஷ்மீவரிஹாராய‐ிஹுஜo ஸ்நாநஶாவரெக॥ தத க்ஹரணo வஸ்த்ரோயாரயெதுவ‐ிஸoவதெ' என்ற ச்லோகத்தினாலும் அறியலாம். காலாதர்சக்ரந்தத்திலும் 'ப்ருதுஶிஷெ சுஶுயாஶூஶெஶ‐ி குஜதாஹுஜாதிஶஜஃ। ஹகுஶாஸoவ ஶஜயெஜூக்ஷ்மீஶெக்ஷுாதிநிவத‐ியெ॥' என்கிற ச்லோகத்தினாலும் ஐப்பசிமாத க்ருஷ்ணசதுர்தசிதினத்தில் விடியற்காலையில் தாரித்ரிய நாசத்தின் பொருட்டு எண்ணெய்த்தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது.

ஸ்ரீ:

கண்ணனும் கவிதார்க்கிகஸிம்ஹமும்

பகவானுடைய லீலா விநோதங்களில் ராம க்ருஷ்ணாத்யவதார ரூபமான விபவாவதாரங்களும் ஒன்று. மேற்படி விபவாவதாரங்களிலே க்ருஷ்ணாவதாரம் மிகவும் விசேஷம் பொருந்தியது என்று கருதப்படுகிறது. ஏனெனில் இதில் தான் யாவரும் எளிதில் நெருங்கி பழகக்கூடிய ஸௌலப்யம் நிறைந்த பகவானின் பரிபூர்ண அம்சம் இருக்கிறதென்று பெரியோர் கூறுவர். பாலர் முதல் வ்ருத்தர் வரை யாவரும் வயோ வ்யத்யாஸம் இல்லாமல் அதிஸுலபமாக கூடிக் கலந்து அநுபவித்த அவதாரம் இது ஒன்றே. ,,உன் தன்னைச் சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே'' என்று தங்கள் ஸகாவாக வெகு உரிமையுடன் இடைப் பிள்ளைகளால் நட்பு கொள்ளப்பட்டவன். அப்படிப்பட்ட எம்பெருமானை ஆழ்வார்களும் அவர்களுக்கு முற்பட்டவர்களும் பல்வேறு விதமாக உருவகப்படுத்தி வழிபட்டார்கள். ஆயினும் நமது ஆசார்யனான ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் நாநாப்ரகாரமான ஸ்தோத்திராதிகளால் கண்ணனின் கல்யாணகுணங்களைப்பேசியிருக்கிறார்.

இங்கு ஸ்ரீ தேசிகன் கண்ணன் கழலிணையையே நண்ணும் மனமுடையவர் என்பது பற்றி சிறிது பேசப்படுகிறது. இதற்கு கோபால விம்சதியென்கிற சிறிய ஸ்தோத்ராவளியோடு யாதவாப்யுதயம் போன்றதொரு மஹாகாவ்யத்தை அவன் திருவடிகளின்கண் அமைத்து அருளிச் செய்திருப்பது ஒன்றே மேற் கூறிய விஷயத்தை உறுதிப்படுத்த வல்லது. இது பற்றி நன்கு தெள்ளத் தெளிய வேண்டுமெனில் ஸ்தோத்திரத்தினூடே செறிந்து கிடக்கும் விஷயங்கள் மூலமாக நன்கு தெரியவரும்.

கோபாலவிம்சதி, யாதவாப்யுதயம் இவ்விரண்டிலும் மங்களச்லோகமாக—

,,வந்தே ப்ருந்தாவநசரம் வல்லவீஜந வல்லபம் ।
ஜயந்தீ ஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம் ॥'' என்று வருகிறது.

,,ஜயந்தியில் தோன்றி வைஜயந்தீ மாலையை ஆபரணமாகக் கொண்டு ஆயர்பாடி வாழும் செல்வச் சிறுமிகளுக்கன்பனாய், ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரிக்கும் திவ்ய தேஜஸ்ஸை ஸேவிக்கிறேன்'' என்பது இதன் பொருள். இங்கு கண்ணனை ஸேவிக்கிறேன் என்ற விடத்து நிகழ்காலம் கவனிக்கத்தக்கது. இங்கு கவி ஸ்ரீ கண்ணனை எக்காலமும் நமஸ்காரம் செய்து கொண்டே அதுவே யாத்ரையாய் நிகழும்படி நடந்து வருகிறவர் என்பது அப்பதத்தினால் புலனாகிறது. மேற்படி மஹாகாவ்யத்தை எழுதப் புகுந்த பொழுது விக்நமில்லாமல் க்ரந்தம் பரிஸமாப்தி அடைவதற்காக நமஸ்காரம் நிகழ்கிறது என்று அந்தவிடத்தில் அர்த்தஸங்கோசம் செய்வதில் காரணமொன்றுமில்லை. இவ்வர்த்தமே இங்கு விவக்ஷிதம் என்பதை ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதரும் தமது வ்யாக்யானத்தில் நன்கு தெளிவு படுத்துகிறார். ,,வந்தே' இதி வர்த்தமாந நிர்தேஶ: ஸ்வவந்தநஸ்ய ஸதாநுவ்ருத்திபர:; ந து ப்ராரம்ப ஸமய வர்த்தமாநத்வபர:, ஸங்கோசே ஹேத்வபாவாத் ।'' என்று

ஸ்ரீ வால்மீகி முனிவர் ஸ்ரீ மத்ராமாயணம் எழுதப் போந்த காலே அம்மஹாமுனிவருக்கு ராமகதை ஓர் சலனப் படம்போல் அநுவ்ருத்தியாக கதை எழுதுவதற்கு ஸௌகரியமாக இருக்கும்படி தோன்றி வந்ததாம். அதைக் கொண்டு அம்முனிவரும் ஓர் வ்ருத்தாந்தமும் விடாமல் எளிதில் ராமாயணத்தைச் செய்தருளினார் என்பர். ஸ்ரீதேசிகனும் கோபால விம்சதி போன்ற க்ருஷ்ண விஷயகமான ஸ்தோத்திரங்களைச் செய்தருளும் போது அவருக்குக் கண்ணனின் லீலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் அவிச்சிந்நமாகத் தோன்றியிருக்கவேண்டும். அதைக்கண்டே நம

தேசிகனும் மேற்படி ஸ்தோத்திரங்களை அநுக்ரஹித்தாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது விஷயம் 'ஹத [illegible] க்ருஹே" என்னும் ச்லோகத்தை வாசிக்குமிடத்து நன்கு புலனாகும். குழந்தை கண்ணன் வெண்ணெய் திருடுகின்றான். ஸ்வக்ருஹத்திலேயே தான். தன் தடங்கையார வெண்ணெயை வாரி விழுங்குகிறான். போதாத குறைக்கு முழங்கை வரை தன் கையை வேறு வெண்ணெத்தாழியில் விட்டு விட்டான். இந்த ஸமயத்தில் யசோதை வந்து விட்டனள். மிரள மிரள விழிக்கிறான் பரந்தாமன். உலகமெல்லாம் அவனுள் ஒளிந்து கிடப்பதால் தன்னை ஒளிப்பதற்கு இடம் கிடைக்கவில்லை போலும் அவனுக்கு. என்ன செய்வதென்று ஒன்றும் விளங்கவில்லை. தாயோ சயிற்றைத் தேடிக் கொண்டிருக்கிறாள் அவனைக் கட்டி வைக்க. கோபத்தினால் சிவந்து துடிக்கும் அவளது கண்களை நிமிர்ந்து காணவும் கூடவில்லை அவனால். எம்பெருமானுக்கு அவ்விடத்திலிருந்து ஓடிப் போய் விட வேண்டுமென்று எண்ணம். ஆனால் அவனால் போகவும் முடியவில்லை; நிற்கவும் முடியவில்லை; இதைத்தான் ஸ்ரீ தேசிகன் "நாபஸர்த்தும் ந திஷ்டநு" என்றருளிச் செய்கிறார். இம்மாதிரியான வ்யாபாரங்கள் மனவெழுச்சியினால் நிகழக்கூடியவை. அப்பொழுது முகபாவமே அநிர்வசநீயமாக இருக்கும். இதை ஊஹத்தினாலோ ஸூக்ஷ்ம புத்திவிசேஷத்தினாலோ தானறிந்து பிறருக்கு அறிவிப்பது என்பது மிகவும் கடினமானதோர் கார்யம். ஆனால் நம் தேசிகன் பகவானின் அவ்வவஸ்தையை நேரில் கண்டு ரஸித்தவர் போல நன்கு தெளிவு படுத்தி நமக்குக் காட்டுவதால் ஸ்ரீ தேசிகனுக்கும் வால்மீகி மஹரிஷிக்குக் கிடைத்தது போல எம்பெருமானின் லீலா விநோதங்களின் ஸாக்ஷாத்காரபாக்யம் கிடைத்து க்ரந்தத்தை அருளிச்செய்தாரோவென்று ஐயுற வேண்டியிருக்கிறது.

இப்படி தேசிகன் ஸ்ரீ கண்ணனையும் அவன் லீலா விநோதங்களையுமே காலமெலாம் கருத்தில் கொண்டு வணங்கி வந்தாரெனினும் 'ப்ராண ப்ரயாண ஸமயே கப வாத பித்தை: கண்டாவரோதந விதௌ ஸ்மரணம் குதஸ்தே' என்று பிறர் அருளிச் செய்தவாறு தமது தேஹவியோக காலத்திலே அறிவு தன் வசமில்லாததொரு அவஸ்தை ஏற்பட்டு அவனை நினைக்க முடியாமற் போனால் என் செய்வது என்கிற பீதியினால் மனங்கலங்கி அம்மாதிரியொரு அவஸ்தா விசேஷத்திலும் அவன் பால் நினைவு தப்பாமல் நிலைத்து இருக்க வேணுமென்று "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்" என்றாப்போலே மனத்தில் கொண்டு அந்த ஸ்தோத்திரத்தில் மேலே ஒரு ச்லோகத்தால் ப்ரார்த்திக்கிறார்.

„கராஹித வர்ஹவம்ஶநாளா
[illegible] ப்ரதிம்ஸகோஶா: |
ஹரிநீலஶிலாவிபங்கநீலா
ப்ரதிபாஸ்து மமாந்திமப்ரயாணே ||"

மரகதக்கல்லென்பது கரும்பச்சை நிறமுடையது. முழுக்கல்லாக இருந்தால் புழுதிபடிந்து அதன் நிறம் சற்று குன்றியிருக்குமென்று எண்ணி 'விபங்கநீலா' என்று அருளிச் செய்கிறார். அதாவது — அப்பொழுது தான் இரண்டாகத் துண்டிக்கப்பட்ட பச்சைக் கல். அதன் நிறம் எவ்வாறிருக்கும்! அவ்வாறு அமைந்திருக்கிறதாம் எம்பெருமானின் திருமேனி நிறம். இதையே தாம் செய்தருளிய பரமபதஸோபாநம் என்ற மணிப்ரவாள க்ரந்தத்தில் "ரஜத கிரியின் மேலே மரகத கிரியிருந்தாற் போலே" என்று வைகுண்டத்தில் எம்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தை வர்ணிக்கிறார். பொன் குடத்திற்குப் பொட்டிட்டாப்போலவும் அழகுக்கு அழகு செய்தாப் போலவும் யசோதை குழந்தையை அலங்கரித்திருக்கிறாள். தலையை நன்றாக வாரி கொண்டை முடித்து அதன் முடியில் மயில் தோகையை வரிசையாக அலங்காரமாக அமைத்திருக்கிறாள். குழந்தை தன் முகாரவிந்தத்தில் புல்லாங்குழலை வைத்து இன்னிசை எழுப்புகிறது. இந்த திவ்யஸ்வரூபத்தை ஸேவித்த நம் தேசிகனுக்கு யாவும் மறந்து விடுகிறது. அந்த ஸேவையில் அப்படியே ஒன்றி விடுகிறார். அவ்ஸேவா

ளிபில் தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் கவனியாமல் பகவானிடம் வரம் கேட்கிறார். அவர்காணும் இந்த திவ்யதேஜஸ்ஸே தமக்குக் கடைசியில் மோக்ஷஸாம்ராஜ்பத்தை நோக்கிச் செய்யும்யாத்ரையில் மார்க்கதரிசியாக அமைய வேணுமென்று.

இப்படி அல்லும் பகலும் அநவரதமும் எம்பெருமானை பூஜித்தும், பொழுது போக்கியும் வணங்கி வழிபட்டும் வந்தமையால் எம்பெருமானின் திருவுருவம் சித்திரம்போல் ஸ்வாமியின் திருவுள்ளத்திலே நிலைத்துவிட்டது. சித்திரம் என்பது ஒருவரால் எழுதப்பட வேண்டியதோர் கலை. ஆகையால் தன் மனத்தில் பிறர் ஒருவர் எழுதாமல் பதிவதற்கு நியாயமில்லை. அப்படிப்பட்டதோர் அழகிய சித்திரத்தை தன் மனத்திரையில் வரைந்த அச்சைத்ரிகன் யாராக இருக்கக்கூடும் என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறார்.

“ஹாரீ ஶிகண்டிவர்ண ருசிரோ விலிகித: கேந சேதஸி ஶில்பிநா । ஸ்மராதுர வல்லவீஜநாவக்த்ராம்போஜ திவாகரோ யுவா ॥”

“கண்டோர் யாவருடைய கருத்தையும் இழுக்கச் செய்யும் கவர்ச்சி பொருந்திய மயில் தோகையினால் அலங்கரிக்கப் பட்டவனும், மன்மத பாணத்திற்கு இலக்காகி அதனால் வாடி வதங்கிக் கிடக்கும் கோபிகளின் முகதாமரை மலர்களுக்கு ஸூர்யனைப் பிரகாசிக்கும் இவ்விளம் வாலிபனை என்மனத்திரையில் எழுதிய அச்சிற்பி யார்?” என்று கேட்கிறார்.

இவ்வாறு தாம் கேட்டுக்கொண்ட கேள்விக்கு ஸ்ரீ தேசிகன் அப்போது ஸமாதானம் கூறவில்லை. அவருக்கு அப்பொழுது அது விளங்கவில்லை போலும். பின்பு ஒருக்கால் ஸ்ரீ எம்பெருமானாரை யதிராஜஸப்ததியினால் மங்களாசாஸநம் செய்யும்பொழுது அவரது அநுக்ரஹ விசேஷத்தினால் முன்பு கேட்டுக்கொண்ட தமது கேள்விக்கு பதில் கிடைத்தாற்போலிருக்கிறது.

‘நாயகஸ்ஸ்வவிஷயே யதீநாம் நவரஶ்மிஜாலை: ஸஹநிஜைர் நயநீய தமோ ஹ்ருதீயம் । விஜ்ஞாந
வித்ருஹ்நவோ விலிகதீவ சித்தே வ்யாக்யாந
கேளிரஸிகேந கராம்புஜேந ॥’

‘ஶ்ரியா ஸௌவர்ணம் பதிம் யதீநாம்’ என்றவாறு யதிகளுக்கெல்லாம் நாதனாய் விளங்குகின்ற ராமாநுசன்தான் தன்நககாந்தியால் தன்னுள் கிடக்கும் அஜ்ஞாநவழுக்கையலம்பி தன் மனத்திரையில் வ்யாக்யாந முத்ரையுடன் கூடிய தன் கராரவிந்தத்தால் தேஜஸ்வரூபமான திருக்கண்ணனின் திருவுருவத்தைவரைந்தருளினாரோ என்று கூறுகிறார்.

ஆக ஸ்ரீபாஷ்யகாரர்தான் தன்னுள்புகுந்து எம்பெருமானின் வடிவழகை சித்திரமாகத் தீட்டியிருக்க வேண்டுமென்று நிச்சயித்தார். இது பற்றித்தான் நம் தேசிகன் “க்ருஷ்ணே நிவேஶித தியோ வயமேவ நாந்யே” என்று கூறிக்கொண்டாரோவென்று கூறுவதும் மிகையாகாது.

ஸ்ரீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பெருமாளும் பிராட்டியும்

லோகத்தில் ஒரு ஜீவன் தத்வ விவேகம் பண்ணுவிடில் அவனுக்கு நற்கதி இல்லை. அப்படி தத்வ விவேகம் பண்ணப் புக்கால் இவ்வுலகத்தில் ஶாஸ்த்ர மொழிய வெறொரு கைவிளக்கு இல்லாதபடியால் ஶாஸ்த்ர ஸரணியை அநுஸரித்து விவேசிக்கவேண்டும். அந்த ஶாஸ்த்ரங்களை ஆராயும் போது தத்வம் ஒரு மிதுநம். அதாவது - ஒரு திவ்ய தம்பதிகள் என்று ஏற்படும். இம்மிதுநமானது ஒன்றை விட்டொன்று பிரியாது நிற்கும் நிலையானது ‚அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா'' (ஸூர்யனை விட்டு காந்தியை எப்படி பிரிக்க முடியாதோ அது போல் நான் ராகவனை விட்டுப் பிரியாதவள்) என்றும், ‚அநந்யா ஹி மயா ஸீதா' (ஸீதையானவள் என்னை விட்டு வேறு படாதவள்) என்றும், ‘விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ' என்றும், ‚ஶ்ரீவத்ஸவக்ஷா நித்யஶ்ரீ:' என்றும், அகலகில்லேனிறையும்' என்றும், ‚அகலகில்லாத்திருமகளார்' என்றும், ‚தினைத் தினையுந் திருமகளை விடாதார்' என்றும், ஸ்ம்ருதிகளிலும், ஸம்ப்ரதாயங்களிலும் பரக்கப் பேசப்படுகிறது. இவ்வர்த்தத்திற்கு மூலமான ச்ருதியும் ‚ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ। அஹோராத்ரே பார்ஶ்வே' என்று ஓதிற்று. அவதாரங்களிலும் குறள் மாணாய் உலகிரந்த போது தன் வேஷத்திற்கு மாறாக பிராட்டியை ‚க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வபு: ஶ்ரியம் வக்ஷஸ்தலாஶ்ரயாம்' என்கிறபடி திருமார்பில் தாங்கி க்ருஷ்ணாஜினத்தால் மறைத்துக்கொண்டு எழுந்தருளினனென்பது ப்ரஸித்தமிறே. இப்படி இணை பிரியாத ஒரு மிதுனத்தை மஹாகாதுகனான ராவணன் பிரித்த போதிலும் ‚அஸ்யா தேவ்யா: மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்। தேநேயம் ஸ ச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி ॥' என்கிறபடி இவளுடைய மனத்தில் அவன் கோயில் கொண்டிருப்பதாலும் அவனுடைய மனத்தில் இவள் வாஸம் செய்வதாலும் இருவருடையவும் ஸத்தைக்கு ஹாநி ஏற்படாமலிருக்கிறது.

அவதாரங்களில் இரண்டு வஸ்துவும் தனித் தனியே அவதரிக்கும் போது ஒன்றை ஒன்று சேர்வதற்கு படும் பாடுகளை ஆராய்ந்தால் இவ்வஸ்து ஒருக்காலும் பிரிவு படாதது என்று விளங்கும். சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தார் பெருமாள். பிராட்டி ஜநகனின் திருமகளாய் திருவவதரித்தாள். பிராட்டியை அடைய பெருமாள் அயோத்தியிலிருந்து மிதிலையின் தூரத்தையும் திருவுள்ளத்தில் கொள்ளாது தம் திருவடிகளால் நடந்து எள்ளியாயிற்று. ஜநகமஹாராஜர் பெருமாளின் ஆபிரூப்யத்தில் ஈடு பட்டு விச்வாமித்ர மஹரிஷி பெருமாளின் ஸௌகுமார்யத்தை அறியாது திருவடிகளால் நடத்தி மிதிலைக்கு அழைத்து வந்ததைப் பார்த்து மிகவும் மனத்தில் நொந்து ‚கதம் பத்ப்யாமிஹ ப்ராப்தௌ' என்று மஹரிஷியை கேட்கிறார். இப்படி பிராட்டியை பாணிக்ரஹணம் செய்வதற்காக பெருமாள் விச்வாமித்ர கிங்கரராக ஆகி காலால் நடந்து தன் ஸத்தை தரிக்கும்பொருட்டு மிதிலைக்கு எள்ளி பிராட்டியுடன் சேர்ந்து ‚அதீவ ராம: ஶுஶுபே முதாந்விதோ விபு: ஶ்ரியா விஷ்ணுரிவாமரேஶ்வர:' என்று ப்ரகாசித்தான். மேலும் இந்த சேர்த்தியைக் கண்டு ஸேவித்து அந்த ஆநந்த பரீவாஹத்தால் அம்மிதுநத்தினிடத்து இளையபெருமாள் போல் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து உஜ்ஜீவித்துப் போகாமல் இந்த சேர்த்தியை அழித்து ஒன்றையொன்றையும் பிரித்தான்

பொல்லா விராவணன். இருவரும் சேர்ந்திருக்கும் போது வந்தால் அந்த சேர்த்தியில் ஈடு பட்டு எங்கு இளைய பெருமாள் போல் ஆகி விடுவோமோ என்று பயம் போல் இராவணனுக்கு. பிராட்டியை இழந்ததும் பெருமாள் பெருந்துயரில் விழுந்து, அவளுக்காக வாலியைக் கொன்று, ஸேது பந்தனம் செய்து, ஒருவரும் அணுக வொண்ணுத இலங்கையை அழித்து, இராவணனைக்கொன்று, பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி பிராட்டியுடன் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்த பிறகே வீறு பெற்றுர் பெருமாள். இப்படி பிராட்டியைப் பிரிந்த போது பெருமாள்படும் நிலை இதுவாயிருந்தது.

க்ருஷ்ணுவதாரத்தில் 'ஶ்ருத்வா ஶணாந ஸௌந்தர்ய ஶ்ருணதாம் தெ' என்கிறபடி கண்ணனின் குணங்களையும் வடிவழகையும் கேட்டு ருக்மணி பிராட்டி அவனை அடைய பெரும்பாடு பட்டது எவ்வளவு என்று சொல்லத்தரமன்று. வானிடை வாழும் அவ்வானவருக்கு மறையவர் வேள்வியில் வகுத்த ஹவிஸ்ஸை கானிடத் திரிவதோர் நரி கடப்பதும் மோப்பதும் செய்வது போல் கண்ணபிரானுக்கென்றே ருக்மணியானவள் அவளுடைய அவரைப்பிராயம் தொடங்கி அவனைச்சங்கற்பித்து வைத்திருக்கும் போது நரிக்கு ஸமானமாயுள்ள சிசுபாலன் அவளைக் கைப்பிடிக்க வரும் போது அவன் தேசழியும்படியாக அவன் அண்ணுந்திருக்கும்போதே கண்ணபிரான் அவளைக்கைப் பற்றின போதுதான் அவளுக்கு ஸத்தை ஏற்பட்டது. ஒரு ஸமயம் கண்ணபிரானும் ருக்மணி பிராட்டியும் ஏகாந்தமாக விருக்கும் போதுருக்மணியானவள் திருவாலவட்டத்தை எடுத்து பெருமாளுக்கு பரிமாறிக்கொண்டிருந்தாள். அப்போது பெருமாள் வேடிக்கையாக ருக்மணியைப் பார்த்து 'ருக்மணி! சிசுபாலனை மணந்திருப்பாயாகில் அநேக போகங்களை அநுபவித்துக் கொண்டு மஹாராணியாக விருக்கலாமே; என்னை மணந்து என்னபயன்' என்றிப் புடைகளில் ருக்மணிக்கு நாராசம் போலுள்ள சில வார்த்தைகளை சொல்லிக் கொண்டிருக்குமளவில் திடீரென்று ருக்மணி மூர்ச்சையாகி விடவே பெருமாள் உடனே அவளை எடுத்து வாரி யணைத்து ஆச்வாஸப் படுத்த வேண்டும் படியாயிற்று. ஆகையால் வேறொருவருக்கு என்று பேச்சுப்படில் வாழகில்லாத் தன்மையள் பிராட்டி. விச்லேஷ வார்த்தை பேசப் படும் போது ஸத்தை யிழக்கும் ஸ்வபாவம் இவர்களுடையது. 'ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ' என்பது இவன் ஸ்வபாவமாயிருந்தால் 'ந ஜீவெயம் க்ஷணமபி' என்பது அவள் ஸ்வபாவமாயிருக்கும். இப்படி அந்வய வ்யதிரேகங்களால் இம்மிதுநம் ஒன்றை விட்டொன்று பிரியாத வஸ்து என்று ஏற்படுகிறது.

இப்படி ஒன்றை யொன்று விட்டுப்பிரியாததோடு ஒன்றுக்கொன்று அதிசயாதாயகங்களாயிருக்கும் இம்மிதுநம். ''அஸ்யா தெவ்யா மநுஷ்யாணாம் ஸா ஜநகாத்மஜா'' என்றும், 'வஶீ வதாந்யோ குணவாந் ருஜு: ஶுசி: ம்ருதுர்தயாளு: மதுர: ஸ்திர: ஸம: க்ருதீ க்ருதஜ்ஞஸ்த்வமஸி'' என்றும் சொல்லுகிறபடி பிராட்டியினல் பெருமாளுக்கு ஏற்றமும் ''திருவுக்கும் திருவாகிய செல்வா'' என்றும் ''கஃ ஶ்ரீ: ஶ்ரியஃ'' என்றும் சொல்லுகிறபடி பெருமாளால் பிராட்டிக்கு ஏற்றமும் ஏற்படுகிறது. இப்படி ஒன்றுக்கொன்று அதிசயாதாயகங்களாக விருப்பதோடு ஸ்வரூபத்தாலும், குணங்களாலும், வ்ருத்தங்களாலும் ஒன்றுயிருப்பதை நோக்கியே ''துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் | ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா || என்று திவ்ய தம்பதிகளின் ரஹஸ்யத்தை அறிந்த திருவடி ஸாதித்தார். நம் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகரான ஆளவந்தாரும், ''ஸ்வரூப ... ஸ்வாநுரூபா தவாபி தவ ஶ்ரியா' என்றுர். இவ்வர்த்தங்களைக் கணிசித்து நமக்கெல்லாம் ப்ராப்யமான பரப்ரஹ்மத்தின் ஸ்ரூபத்தை பேசும் போது அநேக ப்ரமாணங்களை உபந்யாஸம் செய்து, பிறகு ''என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிற படியே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வாவஸ்தையிலும் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியா

ரோடு பிரிவில்லாத முழுநலமான அனந்தஜ்ஞாந ஸ்வரூபமாக வநுஸந்திக்கவேணும்'' என்று பெரிய ரஹஸ்யத்தில் தூப்புல் பிள்ளை ஸாதித்தார்.

இப்படிப்பட்ட மிதுநத்தை தத்வமென்றறிந்தபின் ''ஸஜாதபாஷ்பாவரணம் ஜகாம நிவேஸ்ய ராமாநுஜ: | ஸீதாஸ்வாமாதியஸா: ராகவம் ச ஸஹாயமதம் ||'' என்று சொல்லுகிறபடி அம்மிதுநத்தையே உபாயமாகப்பற்றி 'பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா ... ஸ்வபதஸ்ச தே' என்று சொல்லுகிறபடி அம்மிதுநத்திற்கே கைங்கர்யம் பண்ணவேண்டியது அவச்யம்.

இப்படி ஶாஸ்த்ரஸாரணிபோகும் நிலை தத்வஹித புருஷார்த்தவிஷயங்களில். இவ்வர்த்தத்தை அறியாது சேதநர்கள் தடுமாறி நிற்கும் நிலையில் அரும்பொருள் நூல்விரித்த திருவேங்கடத்தான் தூப்புலில் திருவேங்கடநாதனென்னும்குருவாய் திருவவதரித்து இவ்வர்த்தத்தை வெகு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். ''ஸம்பதீ ஜகதாம்பதீ'' என்றும் ''ஶேஷித்வம் பதிஸ்யாதீக்ஷாஸ்தீக்ஷாஸஹே' என்றும் 'யா வா தேவ தம் ஸம்வதீ ந:' என்றும் பலபடியாக அருளியுள்ளார்.

ரஹஸ்யங்களில் ப்ரதாநமாயுள்ளது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம். அந்த ரஹஸ்யத்ரயத்தின் ஸாரமான அர்த்தம் ஒருமிதுனமே வாசியற உபாயதசையிலும் ப்ராப்யதசையிலும் நமக்கு உத்தேச்யமென்பது. ரஹஸ்யத்ரயஸாரத்தின் ரஸமான இவ்வர்த்தத்தை உரைப்பவராகிய நம் ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் கேவலமெல்லோருக்கும் இந்த பரமரஹஸ்யத்தை உபதேசிப்பதோடுநில்லாமல் இவ்வர்த்தத்தைப்ரத்யக்ஷமாக்கவேண்டி ஒன்பதுநரஸிம்ஹமூர்த்திகளில் மாலோலனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ''ஐஐ மஹாஸ்சர்யமாகதம்'' என்று மாலாகாரன் ஆச்சர்யப்பட்டாப்போல் எல்லோரும் வியக்கும்படி ஒவ்வொரு க்ருஹங்கள்தோறும் எள்ளி அநுக்ரஹித்தபடி. ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரமஹாதேசிகனோடு நில்லாமல் இன்னும் எல்லா சேதநர்களையுமநுக்ரஹித்துக்கொண்டிருக்கிறான் மாலோலன்.

ஸ்ரீ:

செய்திகள்

தங்கப்பெட்டி நன்கொடை

இப்பவும் ஸ்ரீஸன்னிதியில் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸஞ்சார காலங்களில் எழுந்தருளும் ப்ராசீனமான தங்கப்பெட்டியைப் புதுப்பிக்க ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியாயிற்று என்பதை அறிந்த சென்னை, திருவல்லிக்கேணியில் இருக்கும் ப்ரபல அட்வொகேட் N. G. கிருஷ்ண அய்யங்கார்ஸ்வாமி ஸுமார் 3000 ரூபாயில் புதிதாக ஒரு பெட்டிபண்ணி ஸமர்ப்பித்தார். **"ऋषेः कण्वस्य पुत्रस्य कण्डुना परमर्षिणा"** என்கிறபடி இவருடைய தகப்பனார் ஸ்ரீஸன்னிதிக்கு ஸாளக்ராமப்பெட்டி வெள்ளியில் பண்ணி ஸமர்ப்பித்தார். இவரோ பெரிய பெருமாளை எழுந்தருளப்பண்ணுவதற்குத் தங்கப்பெட்டியைப் பண்ணி ஸமர்ப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

ஸ்ரீகார்யம், தையார், ஜோஸ்யம்,
வித்வான் ரங்காசாரியர்.

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகஸபை, பம்பாய்.

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ரமஹோத்ஸவம் இவ்விடம் மாதுங்காவில் தேவதார் வீதி விச்வாஸ் பவனில் ஷை ஸபையின் ஆதரவில் ஆவணிமீ 25உ உபக்ரமித்து உபயவேதபாராயண ரஹஸ்ய க்ரந்த படனதிகளுடன் பத்து தினங்கள் கொண்டாடப்பட்டுஸ்ரீஸ்வாமியின்அவதார தினமான புரட்டாசிமீ 3உ சனிக்கிழமையன்றுவிசேஷவைபவத்துடனும்,இவ்விடம் பனஸவாடியில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸன், ஸ்ரீஸ்வாமிக்கு அநுக்ரஹித்தருளிய மாலைமரியாதைகளுடனுமினிதுமுடி

[stamp]

வடைந்தது. பல ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த உத்ஸவத்தில் மிகுந்த ச்ரத்தையுடன் அந்வயித்து உத்ஸவத்தை நடத்திவைத்தனர். உத்ஸவத்தின் முதல்தினம் ஸ்ரீ. உப. திருக்குடந்தை ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி "ஸ்ரீதேசிகனின் கவிதை" என்னும் விஷயமாக மிகவும் ரஸமாக உபந்யஸித்தார்.

இவ்விதம் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ரம் 13-9-53 ல் திருக்கேட்டையன்று மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது.

N. சடகோப தாஸன்.

இஞ்சிமேட்டில் ஸ்ரீஸீதாகல்யாணம்

விஜய ஸ்ரீ ஐப்பசிமீ 5உ புதன்கிழமை (21-10-53) மதுராந்தகம் ஸ்ரீஅஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை வைஸ்ப்ரின்ஸ்பால் ஸ்ரீ. உப. முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மா. ராஜகோபாலாசார்யர் முதலான அக்ரஹாரவாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீவால்மீகிராமாயணத்தின் ஸீதா விவாஹகட்டத்தைக் கம்பராமாயணக்கவிகளுடன் வெகு அழகாக உபந்யஸித்தார். முடிவில் உபந்யாஸகருக்கு உசிதமாக ஸம்பாவனையும், கோஷ்டிக்கு சந்தனதாம்பூலாதிகளும் வழங்கப்பட்டது.

மா. ரங்கநாதன்

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ப்ரதிஷ்டை, வடக்குப்பட்டு.

நிகழும் விஜய ஸ்ரீ ஆவணிமீ 4உ சிங்கப்பெருமாள்கோயிலுக்கு ஸமீபத்தில் உள்ள உத்தர லக்ஷ்மீபுரம் என்கிற வடக்குப்பட்டு அக்ரஹாரத்தில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீஸுந்தரவரதராஜப்பெருமாள் ஸன்னிதியில் ப்ராசீன பெருமாளான ஸ்ரீஆதிகேசவனுக்கு ஜடிபந்தனஸம்ப்ரோக்ஷணமும், ஷை அக்ரஹாரவாஸிகளான சிஷ்யகோடிகளின் ஆஸ்தாவிசேஷத்தாலும், த்ரவ்யஸஹாயத்தாலும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் விக்ரஹப்ரதிஷ்டையும் மிக விமர்சையாக நடந்தேறியது.

ஷை ப்ரதிஷ்டா கைங்கர்யத்தை காஞ்சி ஸ்ரீதேவப்பெருமாள் ஸன்னிதி பட்டரான சீமாபட்டர் என்கிற K. ஸ்ரீநிவாஸபட்டரும், திருவள்ளூர் ஸ்ரீவீரராகவன்ஸன்னிதி பட்டரான செ. ரங்கநாதபட்டரும் பக்தி ச்ரத்தையுடன் நடத்திவைத்தார்கள். புரட்டாசிமீ 21உ மண்டலாபிஷேகமும், 27உ கேட்டை திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு விசேஷதிருமஞ்சனமும் நடந்தது. முடிவில் வேதப்ரபந்தசாற்றுமுறையுடன் கோஷ்டிக்கு தீர்த்தப்ரஸாதவினியோகங்களும் சிறப்பாக நடந்தது.

மாடபூசி. கோபாலதாஸன்.

ஸ்ரீபாகவத புராண ப்ரவசனம், பாதூர்.

இவ் வக்ரஹாரத்தில் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத பாடசாலை உபாத்யாயர், ஸ்ரீ. உப. வித்வான், தோட்டாலம், வேணுகோபாலாசார்ய ஸ்வாமியால் இரண்டுமாத காலமாக நடத்தப்பட்டு வந்த ஸ்ரீபாகவத தசமஸ்கந்த ப்ரவசனம் நாளது விஜய ஸ்ரீ ஐப்பசிமீ 10உ திங்கட்கிழமை 'ஸ்ரீ ருக்மிணீ கல்யாண' த்துடன் பூர்த்தி யடைந்தது. ஸ்ரீ. உப. தூப்புல், நரஸிம்ஹாசார்யரால் ப்ரவசனத்தின்போது ஸ்ரீ பாகவதம் மூலம் ஸேவிக்கப்பட்டு ஸ்ரீ வேணுகோபாலாசார்ய ஸ்வாமி நன்கு அர்த்தம் ஸாதித்து வந்தார். ஸ்ரீ ஸ்வாமி வெகு அழகாக ஜனரஞ்ஜகமான முறையில் உபன்யஸித்து வந்தார். ப்ரதி தினமும் அநேகம் பக்தர்கள் கேட்டு மகிழ்ந்தனர். ருக்மிணீ கல்யாணத்தன்று ஆக்ரஹாரிக ஸ்ரீவைஷ்ணவர்களால் உசிதமாக ஸ்ரீ ஸ்வாமிக்கு வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டது. கோஷ்டிக்கு சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.

சில வருஷங்களாக பருவமழை ஸரியான படி இல்லாமலிருந்தது. ஸ்ரீ பாகவதப்ரவசனம் ஆரம்பமான தினத்திலிருந்து மழை பெய்யஆரம்பித்ததுடன் ருக்மிணீகல்யாண ப்ரவசன தினத்திற்குள் ஏரி, குளங்களெல்லாம் நிரம்பி வழிந்தோடுகின்றன. இதைக் கண்ட பக்தர்கள் 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி ... ... நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்' என்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருவாக்கு மெய்வாக்கானதைக்கண்டு ஸந்தோஷமடைந்துள்ளனர்.

இதற்கு முதல் காரணம் இங்கு தமது பாடசாலையை ஏற்படுத்தியும், அதற்கு ப்ரவசனகர்த்தாவாக ஸ்ரீ ஸ்வாமியை நியமித்தும் இங்குள்ள தம் சிஷ்யர்களை பரிபூரண க்ருபையுடன் அநுக்ரஹித்துவரும் ஸ்ரீ அழகியசிங்கரே. ஸ்ரீ அழகியசிங்கர் திறத்து அடியோங்களுடைய ப்ரணமபரம்பரைகளைத் தவிர வேறு கைம்மாறு காணகில்லோம்.

P. T. ஸ்ரீநிவாஸ தாஸன்

ஸ்ரீ:

சிறையிருந்தவள் ஏற்றம்

உலகத்தில் பொதுவாக ஏதோ சில காரணங்களினால் ஸ்திரீ புருஷர்களுக்குச் சிறைவாஸம் ஏற்பட்டால் அதனால் அவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஒருவித மாசு ஏற்படுமேயன்றி ஏற்றம் ஏற்படாதென்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். அப்படியிருக்கப் பிராட்டிக்கு மாத்திரம் அச் சிறைவாஸத்தால் ஏற்றம் ஏற்பட்டதென்பது எங்ஙனே பொருந்தும் என்கிற சங்கையானது அப்பிராட்டியின் ஸ்வரூபங்களை நன்கு அறியாதவர்களுக்கு ஏற்படக்கூடும். ஆகையால் அச் சங்கையைப் பெரியோர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு நிரஸிக்கலாம். ஸமஸ்தகல்யாணகுணங்களோடு கூடிய ஸர்வேச்வரன் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காக கர்மமூலமன்றிக்கே இச்சாமூலமாக ‘மீனாகி ஆமையுமாய்’ என்கிறபடி அனேக சரீரங்களையெடுத்து அச்சரீராநுபந்திகளான ஸுகதுக்கங்களையநுபவித்த போதிலும் அச் சரீரங்களைப் பரிக்ரஹித்துச் செய்த கார்யங்களினால் அவனுடைய கல்யாணகுணங்கள் ப்ரகாசமாகி இதுகாறும் எப்படியெல்லோரும் அக் குணங்களோடு கூட அவனைக் கொண்டாடுகிறோமோ அம்மாதிரி ‘ராவணவதேச்சயைவ ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜநநீ’ என்கிறபடியே இவளவதாரமும் கர்மமூலமன்றிக்கே இச்சாமூலமானபடியாலும் அவதரித்துச் சிறையிருந்ததும் ‘ஸாநுஜ ராவணாயஸ்ய ஸாஸ்ரீர்வஸாக்ஷயே । தஸாநநஸ்ய வதேந தஸரோஸாநாவாஸஸ:’ என்கிறபடியே சரணாகதாளான தேவஸ்திரீகளுடைய பந்தத்தைப் போக்கடிப்பதற்காகவன்றோ. இதனால் தாயாருக்கு அஸாதாரணமான வாத்ஸல்யம் என்கிற குணம் வ்யக்தமாகிறபடியால் அக்குணத்தோடு அப்பிராட்டியை எல்லோரும் போற்றி வருகிறோம்.

உலகத்தில் ஏற்படுகிற சிறைவாஸம் பாபகார்யம். ஆகையால் சிறையில் இருப்பவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு குறைவு ஏற்படுகிறது. கீழ் கூறியபடி ஆச்ரிதரை ரக்ஷிப்பதற்காக இப் பிராட்டியினுடைய சிறைவாஸம் கர்மமூலமன்றிக்கே இச்சாமூலமானபடியால் ஒருவித தோஷமும் ஏற்படுவதற்கு ப்ரஸக்தியில்லை. தான் சிறையிலிருக்கும்போது ஹநுமான்வாலில் நெருப்பு வைத்ததைக் கேட்டு ‘ஸீதோ பவ ஹநூமத:’ என்று அக்நியைக் குறித்துச்சொன்னவளுக்கு ராவணன் தன்னை அபஹரிக்கிற காலத்தில் அவனைப் பார்த்து ‘நசீதோ பவ’ என்று சொல்லத் தெரியாதா? அப்படிச் சொல்லாததனால் இச்சிறைவாஸம் ராவணனுடைய நிர்பந்தமூலமென்றும் சொல்ல முடியாது.

மேலும், இவள் சிறையிராவிடில் ராமாயணம் அவதரிக்க ப்ரஸக்தியே யிராதன்றோ? ‘காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஸ்சரிதம் மஹத்’ என்கிற ச்லோகத்தினால் ராமாயணமெல்லாமிவளுடைய ஏற்றத்தைச் சொல்லுகிறதென்பதை வால்மீகிபகவான் அருதியிட்டார். ‘ஸ்ரீமத்ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே’ என்று பட்டருமருளிச்செய்தார்.

‘இதிஹாஸ ச்ரேஷ்டமான ராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லப்படுகிறது’ என்று உலகாரியரும் அருளிச்செய்தார். மேலும் இப்பிராட்டியினுடைய சிறைவாஸம் இவளுடைய காருண்ய வாத்ஸல்யாதிகளுக்குப் ப்ரகாசகமானபடியால் இக் குணாதிசயங்களை வெளிப்படுத்துவதற்காகவே ப்ரபன்னஜனகூடஸ்தரான நம்மாழ்வாரும் ‘வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால் என் செய்யுமோ’ என்றும், ‘தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்’ என்றும் அருளிச்செய்தார். ஆக இத்யாதி ஸ்ரீஸூக்திகளால் சிறைவாஸத்தில் இவளுக்கு ஒரு ஏற்றமல்லவோ சொல்லப்படுகிறது.

மேலும் 'ரூதடாமெதெ ஃ ஃஜிமெத ஹஷ்டா ஸொாஷிமெத ஃஷி நா கஶுரா । ஃமெதெஃ யெத யா நாரீ ஸா ஸ்ரீ ஜெயா வதிவ்ரதா' என்று சொல்லப்படுகிற பாதிவ்ரத்யமும் இச்சிறைவாஸத்தால் பிரகாசமாயிற்றன்றோ. இதை வால்மீகிபகவான் ஸுந்தரகாண்டத்தில் ராவணன் வாயினல் 'வனகவெணீயஶாஶய்ரா யூாநம் ஃஷிநஃம்வஶழ । கஷூாநெzவ்ரவ வாஸஶு நெதா நாளவயிகாநிதெ' என்று அருதியிட்டார். மேலும் பதியின் வ்ரதத்தையே தானும் வ்ரதமாகக்கொண்டவள் பதிவ்ரதையென்கிற பக்ஷத்தில் அதுவும் இச்சிறைவாஸத்தால் ப்ரஸித்தமானதே. 'ஸகூஜெவ ரூவஞாய தவாஸ்மீதி வ யாவதெ । கஹயம் ஸவடுஹ-ஞெதஹெ்ா ஊஊாஜெ்ரதத்ரசம் ஃஃ' என்கிறபடி யெல்லோருக்கும் அபயப்ரதானம் செய்து ஸர்வப்ரகாரத்திஞலும் ரக்ஷிப்பது இவளுடைய பர்த்தாவின் வ்ரதமானபடியால் அவ் வ்ரதத்தை ஒருபடி யேற்றத்துடன் தான் சிறையிலிருந்து அநுஷ்டித்ததை பட்டர் 'ஶாதஜெஃடியிஶி ஶாக்ஷஸீஸயி தயெவா ஊஃடாவஶாயாஸயா ஶக்ஷஜெ்ா வவநாதூஜா-ஜூவஹதஶா ஶாஃஸெ்ர ஜொஷீகரதா । காகம் தஞ விஹீஷணம் ஶஶணஃத்ரகிக்ஷஃள ஶக்ஷ சஸா நஸாநூஃஹாமஸஸவயதக்ஷா ஷிஷூவாகஸிகீ' என்று மிகவும் அழகாக அருளிச் செய்தார்.

பிராட்டி கூட இருந்தால் தான் ஸர்வேச்வரனுக்கு ஸர்வரக்ஷகத்வம் ஸித்திக்கும். இல்லாவிடில் இல்லையென்பதும் இச்சிறையிருப்பால் தான் ப்ரஸித்தமிறே. இதை வாலிமுகமாகக் கல்வியிற் சிறந்த கம்பர் 'கோவியற்றருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம் ஓவியத்தெழுதவொண்ணு வுருவத்தாயுடைமையன்றோ, ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தையமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ்செய்கை' என்று கூறினர். மேலும் ராவணன் 'வனகவெணீயஶாஶய்ரா' இத்யாதிகளால் பாதிவ்ரத்யப்ரகாசகமான குணங்களோடு பிராட்டியைக் கொண்டாடி மூன்று உலகங்களுக்கும் அதிபதியான என்னை நீ ஆட்கொள்ளவேண்டுமென்று சிரஸ்ஸின் மேல் கையை வைத்து ஸாஷ்டாங்கமாக பூமியில் விழுந்து ஜானகியை நமஸ்கரித்தான். அப்பொழுது பழுக்கக் காய்ந்த நாராசம் போன்றதாயும் பதிவ்ரதையைப்பார்த்து சொல்லத்தகாததுகளுமான ராவணனுடைய அந்த வார்த்தைகள் தன் காதுகளில் விழுவதற்கு முந்தியே கண்களில் நெருப்புப்பொறி பறக்கத் தன்னையும் அதிக்ரமித்து அந்த ராவணனைப் பார்த்துச் சொல்லுகிற ஸமயத்தில் முதலில் மல்யுத்தத்தில் சத்ருக்களை நாசஞ்செய்ய ஸமர்த்தமான திரண்ட தோள்களையுடையவனும் வஞ்சகனுமான ராவணனின் மனம் திருந்தும்படி அவனைத் துரும்பாக மதித்துப் பேசுகின்றுள். 'அடே வஞ்சகா! நீ கூறிய சொற்கள் பதியே தெய்வம், அவன் கைங்கர்யமே பரமபுருஷார்த்தம் என்று நினைத்து அவனுடன் இல்லறவாழ்க்கை நடத்திக்கொண்டுவருகிற மாதர்களுக்குத் தகுந்ததா? அவர்களுடைய மனம் பதி விஷயமாகவன்றி இதரர்கள் விஷயத்தில் சலிக்காமல் கல்போல் இருப்பதற்கு அவர்களிடத்திலுள்ள கற்பைக் காட்டிலும் வேறொன்று வேண்டுமோ? இதையறியாத நீ வாயில் வந்தபடி பிதற்றுகிறாய். இந்த துர்புத்தியை விட்டுவிடு' என்று கடுங்கோபமாகச் சொன்னுள். இதைக் கம்பநாட்டாழ்வான் 'மல்லடு திரடோள் வஞ்சன் மனம் பிறிதாகும் வண்ணங் கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்டதுண்டோ; இல்லொடுந் தொடர்ந்த மாதர்க்கேய்வன வல்ல வெய்ப சொல்லிது தெரியக்கேட்டி துரும்பெனக்கனன்று சொன்னுள்' என்று கூறினன். ஆதிகவியான வால்மீகி பகவானும் இதை 'கநந்ரா ஶாவவெணாஹம் ஹாஸஶெண ரூஹா யயா । உவயாய ஹஜம் தஸ்ர ஜொகநாயஸ்ர ஸக்ஷூதழ ॥ கயஞாஶோவயா ஸ்ராஃ ஹஜஃநூஸ்ர கஸ்ரவிக । கஹஃளவ யிகீ ஹாயடா தஜெஸ்ரவ வஸயாவதெஃ' என்கிறதனல் அருதியிட்டார். மேலும் சிறிய

திருவடி சீதாபிராட்டி சிறையிலிருக்கும்போது இவளுடைய பாதிவ்ரத்யப்ரகாசகாவஸ்தையைப்பற்றி நினைத்ததை 'நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் | ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி || பதிர்நாம வபு: ஸ்த்ரியா பூஷணம் பூஷணாதபி | ஏஷா விரஹிதா தேந பூஷணார்ஹா ந சோபதே' என்பதனாலும் ப்ரகாசப்படுத்தினர். இதை ஹநுமார் ஸ்ரீ ராமசந்த்ரனிடத்திற்றிரும்பிவந்து விஜ்ஞாபித்ததைக் கம்பர் 'கண்ணினுமுளை நீ தையல் கருத்தினுமுளை நீ வாயின் எண்ணினுமுளை நீ கொங்கை யிணைக்குவை தன்னிமேவாது அண்ணல் வெங்காமனெய்த வலரம்பு தொளைத்தவாறுப் புண்ணினுமுளை நீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற்றுமோ' (சுந்தர-திருவடித்தொழுப்படலம்63) என்று மிகவும் அழகாகக் கூறினர். மேலும் த்ரிகூடபர்வதத்தினுடைய சிகரத்திலிருக்கிற இலங்கையில் எப்பொழுதும் உன்னையே த்யானம் செய்துகொண்டிருக்கிற ஒரு பெண்மணியைக் காணவில்லை. அந்தவிடத்தில் மூன்று குணங்களொன்று சேர்ந்து ஸந்தோஷத்துடன் நர்த்தனஞ் செய்வதைக் கண்டேன் என்று விஜ்ஞாபித்ததையும் 'விற்பெருந்தடக்கை வீர வீங்கு நீரிலங்கைவெற்பின் நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன், இற்பிறப்பென்பதொன்று மிரும் பொறையென்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்' (சுந்தர- திருவடிதொழுபடலம்-62) என்றும் கூறினர்.

மேலும் இதரர்களுடையஉத்கர்ஷத்தையோ ஸமமாயிருக்குந்தன்மையையோ பொருக்காததான அஸூயை என்கிற குணம் இப்பிராட்டியினிடத்தில் கொஞ்சமேனுமில்லையென்பதும் இச் சிறைவாஸத்தால் ப்ரகாசமாயிற்றன்றோ?

இதை ஆதிகவி வால்மீகி பகவான் 'தாம் க்ருசாம் தீநவதநாம் மலிநாம்பரவாஸிநீம் | பர்த்ஸயாஞ்சக்ரிரே ஸீதாம் ராக்ஷஸ்யஸ்தாம் ஸமேதத:' என்று ராவணனால் நியமிக்கப்பட்டு ராக்ஷஸிகள் ஸீதையை மிரட்டுகிற ஸமயத்தில் பிராட்டி மூலமாக 'காமம் காதத மாம் ஸர்வா ந கரிஷ்யாமி வோ வச: | தீநோ வா ராஜ்யஹீநோ வா யோ மே பர்த்தா ஸ மே குரு: || தம் நித்யமநுரக்தாஸ்மி யதா ஸூர்யம் ஸுவர்சலா | யதா சசீ மஹாபாகா சக்ரம் ஸமுபதிஷ்டதி || அருந்ததீ வஸிஷ்டம் ச ரோஹிணீ சசிநம் யதா | லோபாமுத்ரா யதாகஸ்த்யம் ஸுகந்யா ச்யவநம் யதா || ஸாவித்ரீ ஸத்யவந்தம் ச கபிலம் ஸ்ரீமதீ யதா | ஸௌதாஸம் மதயந்தீவ கேசிநீ ஸகரம் யதா | நைஷதம் தமயந்தீவ பைமீ பதிமநுவ்ரதா || ததாஹமிக்ஷ்வாகுவரம் ராமம் பதிமநுவ்ரதா' இத்யாதிகளால் அருளிச்செய்தார். தீனனனபோதிலும் பர்த்தாவே தனக்குத் தெய்வமென்று புராணங்களில் கூறப்பட்டுள்ள பதிவ்ரதைகளை எடுத்துக் கூறி தானும் ராமனையே தெய்வமாகக் கொண்டிருப்பதை விளக்குகிருள்.

நம் கவிச்சக்ரவர்த்தி கம்பரோவெனில் 'தக்கவானெருவன்வாழத் தன்குலமெல்லாம்வாழும்' என்கிறபடியே ஸ்திரீ இனத்திற் சேர்ந்த ஸீதாபிராட்டியின் சிறைவாஸத்தாலுண்டான ஏற்றத்தால் மாதர்குலத்துக்கெல்லாமொரு ஏற்றம் ஏற்பட்டதென்பதை 'சோகத்தாளாய நங்கை கற்பினுற்றெழுதற்கொத்த மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்புற்ருர் மற்றைப்பாகத்தாளல்லளீசன் மகுடத்தாள் பதுமத்தாளும் ஆகத்தாளல்லண் மாயனுயிர மோரியாளால்' (சுந்தர- திருவடிதொழுபடலம் 67) என்ற பாட்டால் கூறினர். ஸ்ரீமத்ராமாயண ஸுந்தரகாண்டத்தையும் கம்பராமாயண ஸுந்தர காண்டத்தையும் ஸேவித்த மஹான்களுக்கு இப்பிராட்டியின் சிறைவாஸத்தால் அவளுடைய கற்பு முதலான நற்குணங்கள் நன்கு விளங்கும். கீழ் கூறிய காரணங்களால் இப்பிராட்டிக்குச் சிறைவாஸம் ஏற்றத்துக்குறுப்பாமத்தனையே யன்றி ஒருவித குறைவிற்கும் காரணமாகாதென்பது திண்ணம்.

ஸ்ரீ:

210723

திருப்பாவைக்கதை

(12-வது ஸம்புடம் 8-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நம்முடையதன்று என்று கருதுவது மற்றோர் அம்சம். க்ரியையை நாம் செய்கின்றோமென்று தோன்றினாலும் நம்மை உபகரணமாகவைத்து அவனே செய்கின்றானாகையாலே அவனே இதில் கர்த்தா, நாமல்ல என்று கொள்வது மூன்றாவது அம்சம். இவற்றிற்கு முறையே பலத்யாக மென்றும் ஸங்கத்யாக மென்றும் கர்த்ருத்வ த்யாகமென்றும், மூன்றிற்கும் சேர்ந்து ஸாத்விக த்யாக மென்றும் பெயர். செய்யும் க்ரியையை இந்த ஸாத்விக த்யாகத்துடன் செய்தால் கர்மயோகம் என்பதற்குரிய ஏற்றம் அதற்கு உண்டாகின்றது.

நாம் இப்போது அநுஷ்டிக்க ஆரம்பித்திருக்கும் இந்த மார்கழி நோன்பு காம்யமாயும் நித்யமாயுமிருக்கின்றது. நாம் நித்யமென்று கருதியே அநுஷ்டிக்கின்றோம். அதாவது—பலன் ஒன்றையும் விரும்பாமல் எப்பொழுதும் மார்கழிமாதத்தில் செய்யவேண்டியகர்ம இது என்று செய்கின்றோம். இதை நாம் தூய்மையுடன் அநுஷ்டிக்க வேண்டும். அதாவது– கீழ்ச்சொன்ன ஸாத்விக த்யாக புத்தியாகிற பரிசுத்தி உள்ளவர்களாய் அநுஷ்டிக்க வேண்டும். மனோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களையும் ஈடுபடுத்த வேண்டும். கைகளால் பரிசுத்தமான புஷ்பங்களை எடுத்து அர்ச்சனை செய்து வாயினால் மந்திரங்களையும் மற்ற ஸ்தோத்ரங்களையும்சொல்லிமனத்தினால் அவனை த்யானித்துப் பூஜித்து இந்த வ்ரதத்தை நிறைவேற்ற வேண்டும். இப்படிச் செய்தோமாகில் இதனால் களிப்புற்ற ஸர்வேச்வரன் நமக்கு பக்தி அல்லது ப்ரபத்தி மூலமாக அநாதிகாலமாய் நாம் சேர்த்து வைத்திருக்கும் பாபங்களை யெல்லாம் போக்கி மேல் வரும் பாபம் எதுவும் ஒட்டாமல் செய்து ஸ்ரீ வைகுண்டத்திற்கு அழைத்துக் கொண்டு போய் நித்யாநந்தம் பெறும்படி செய்வான். இதுதான் நமக்குக் கிடைக்கக்கூடிய பரலோக பலன். நோன்புக்கு ஸாக்ஷாத் பலன் பகவானுடைய ப்ரீதி. அதனால் அவன் பக்தியிலோ ப்ரபத்தியிலோ மூட்டிவிடுவான். இதனால் பூர்வோத்தர பாபமெல்லாம் நிச்சேஷமாகக் கழிந்து போகின்றது. உடனே மோக்ஷஸாம்ராஜ்யம் ஸித்தம். என்றிப்படி தங்களுக்கு முடியாகக் கிடைக்கக்கூடிய மஹாபலனை எடுத்துக் கூறினாள்.

பக்தி அல்லது ப்ரபத்திதான் மோக்ஷஸாதனம். மற்ற எதற்கும் ஸாக்ஷாத் அதாவது – நேராக மோக்ஷ ஸாதனத்வம் கிடையாது. மற்ற எதற்கு மோக்ஷஸாதனத்வம் எங்கு சொல்லப்பட்டிருந்தாலும் அது பரம்பரையாக ஸாதநத்வத்தைச் சொல்லுகிறதென்பது ஸித்தாந்தம். நாம் மோக்ஷத்தைப் பெறுவதற்கு ப்ரதிபந்தகமாயிருப்பது நம்முடைய கர்மராசி. இந்த ப்ரதிபந்தகம் கழிந்தால் உடனே மோக்ஷம் கிடைத்து விடும். இது கழிவது பக்தி அல்லது ப்ரபத்தி என்கிற உபாயத்தினால். இவ்வுபாயமுண்டாவதற்குத் தடையாகச் சில பாபங்கள் இருக்கும். அவை இருக்கும் வரையில் உபாயாநுஷ்டாநம் நடைபெறாது. இந்த நோன்பு முதலியவற்றை பகவானுக்கு அர்ப்பணம் செய்து யோகமுறையில் அநுஷ்டித்தோமாகில் அப்பாபங்களெல்லாம் கழிந்து உபாயாநுஷ்டாநம் பிறந்து இதனால் மோக்ஷப்ராப்திக்குத் தடையான ஸர்வ பாபங்களும் அகன்று மோக்ஷம் கிடைக்கும். இப்படி உள்ள சாஸ்த்ர மார்க்கத்தின் உண்மையை மனத்தில்வைத்து இந்த நாயகப்பெண் **'तद्यथेषीक तूलम् अग्नौ प्रोतं प्रदूयेत'** என்று உபநிஷத்தில் ப்ரஹ்ம வித்யைக்குப் பலனாக ஓதப்பட்ட பூர்வோத்தர பாபங்களின் நாசத்தை இந்த வ்ரதத்தின் பலனாகக் குறிப்பிட்டாள்.

வேதத்திலுள்ள கர்மவிதி வாக்யங்களைப் பலவிதமாகப் பிரித்திருக்கின்றனர். தனிப்பட்ட ஒரு கர்ம இருக்கின்றது என்று ஒரு விதிவாக்யம் அறிவிக்கும். இதற்கு **उत्पत्तिविधि** என்று பெயர். அதற்கு இது இது அங்கம் என்று மற்றும் பல விதிவாக்யங்கள் போதிக்கும். அவற்றுக்கெல்லாம் **विनियोग विधि** என்று

பெயர். இந்த பலம் வேண்டியவர்கள் இதைச் செய்யவேண்டுமென்று ஒருவிதிவாக்யம்கூறும். இந்த கர்மாவிற்கு இது பலம் என்று அறிவிப்பது இவ்வாக்யத்தின் நோக்கம். இதற்கு **अधिकार विधि** அல்லது **फल विधि** என்று பெயர். இப்படி ஒரு கர்மத்தைப் பற்றிய உத்பத்திவிதியும் விநியோகவிதியும் அதிகாரவிதியும் தமது பொருள்களையுணர்த்திய பிறகு இவற்றையெல்லாம் சேர்த்து 'இந்தக்காலத்தில் இந்தத் தேசத்தில் இன்னார் இந்த கர்மாவை இதற்காக இந்த அங்கங்களுடன் அநுஷ்டிக்கவேண்டும்' என்று ஸமஷ்டிவிதி ஒன்று கல்ப்பிக்கப்படும். இதற்கு ப்ரயோக விதி என்று பெயர். வேதப்ரக்ரியையை முற்றிலும் அறிந்து அதையே பின்பற்றுகின்ற இந்த நாயகப் பெண் முதலில் நீராடப் போதுவீர் போதுமினோ' என்றும் 'நமக்கே பறைதருவான்' என்றும் பேசி, நோன்பு ஒன்று உண்டென்று ப்ரஸ்தாவித்தாள். இது உத்பத்திவிதியாகின்றது. பிறகு 'செய்யுங் கிரிசைகள்' என்று தொடங்கி அங்கங்களைக் கூறினாள். இது விநியோகவிதி. அதன் பிறகு 'நீங்காத செல்வம்' என்றதும் 'தீயினில் தூசாகும்' என்றதும் அதிகாரவிதி. கர்ம அநுஷ்டிக்கப்படும்போது அநுஷ்டிப்பவர்களுக்கு இயற்கையாயுள்ள அஜ்ஞாநத்தாலும் அசக்தியினாலும் பல தவறுகள் ஏற்படுவது ஸஹஜம். இவற்றுக்குப்பரிஹாரமாக ஸ்விஷ்டக்ருத்(ஸு இஷ்ட-க்ருத்)யாகம் என்கிற ஓர் அங்கம் விதிக்கப்படுகிறது. இதைக் கருத்தில் வைத்து 'ஒன்றும் நீ கை கரவேல்' 'வாழ வுலகினிற் பெய்திடாய்' என்று வேண்டினாள். இப்படித் தனித்தனியே கூறப்பட்ட இவ்விஷயங்களையெல்லாம் வாக்யைகவாக்யதைஎன்று சாஸ்த்ரகாரர்கள் காட்டும் வகையிலே ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும்போது 'மார்கழி மாதத்தில் பெண்கள் உலக க்ஷேமத்திர்காகவும் அவர்களுடைய ஆத்ம க்ஷேமத்திற்காகவும் பல அங்கங்களுடன்கூடிய இந்த நோன்பை அநுஷ்டிக்கவேண்டும்' என்கிற ப்ரயோகவிதிதானே ஏற்படும். ஆகவே அவள் இதுவரையில் பேசினதெல்லாம் ஓர் அரிய மஹாசாஸ்த்ரார்த்தம் என்பது ஸ்பஷ்டம்.

கர்மாநுஷ்டாநம் பண்ணும்போது தேவதை ப்ரதாநமா க்ரியை ப்ரதாநமா என்று விமர்சித்து 'க்ரியையேப்ரதாநம், தேவதை அதற்கு அங்கம்' என்று ஜைமிநி ஸித்தாந்தம் பண்ணினார். இதற்கு நேர் விபரீதமாக தேவதையே ப்ரதாநமென்று பாதராயணர் வேதாந்த ஸூத்ரங்களில் ஸித்தாந்தம் பண்ணினார். அதிலும் அக்நி, இந்த்ரன், ஸோமன் என்று எவ்வித தேவதாரூபத்தமிருந்தாலும் உண்மையில் பரமபுருஷனே எங்கும் தேவதையென்றும், அவனே ஸர்வபலங்களையும் கொடுக்கிறவன் என்றும் முடிவுசெய்திருக்கிறார். இதனாலேயே அவனை ஸர்வகர்மஸமாராத்யன் என்கிறார்கள். ப்ரக்ருதமான கோபகந்யைகளின் வ்ரதத்திற்கு ஸாக்ஷாத் அவனே உத்தேச்ய தேவதை என்பது ஸ்பஷ்டம். இப்படி அவரவர்களநுஷ்டிக்கும் க்ரியைக்கு உத்தேச்யதேவதையாயிருந்து பூஜையைப்பெற்றுக் களித்து, வேண்டிய பலனைத் தருவது என்பதுமாத்திரமல்லாமல் க்ரியைகளுக்குவேண்டிய முன் ஏற்பாடுகளைச்செய்து அவற்றை நிறைவேற்றுவதும் அவனே என்பது வேதங்களின் நுட்பப்பொருள். வேதங்களில் முதலாவதாக எங்கும் கூறப்படுகின்ற ரிக்வேதத்தின் முதல்மந்த்ரம் அக்நி எனப்பட்ட பரமபுருஷனை முதலில் 'யஜ்ஞத்திற்குப் புரோஹிதன்' என்றுகூறிப் பிறகு 'தேவன்' என்றும் 'ஹோதா என்கிற ரித்விக்' என்றும் 'அபேக்ஷித பலனைக்கொடுப்பவன்' என்றும் கூறுகின்றது. 'யாரை முன்னிட்டு நாம் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்கிறோமோ அவர்' என்பது புரோஹிதன் என்ற சொல்லின் பொருள். ஶாஸ்த்ரங்கொண்டறிவதன்றி நேரிலேயே கண்டு களிக்கக்கூடிய நிலையிலுள்ள ஸ்ரீக்ருஷ்ணனையே முன்னிட்டுத் தமது வ்ரதாநுஷ்டாநத்தை நடத்தும் பாக்யத்தைப் பெற்றவர்கள் இந்த கோபகுமாரிகள்.

இஷ்டியென்றும் யஜ்ஞமென்றும் கூறப்படுகிற வைதிகக்ரியைகளை அநுஷ்டிக்கும்போது யாஜ்யை, அநுவாக்யை, ஸ்தோத்ரம், ஶஸ்த்ரம் என்கிற மந்த்ரங்களை ஓதி தேவதைகளின் குணங்களை அநுஸந்திப்பார்கள். அதே ரீதியில் இங்கும் கீழ்ச்சொன்னபடி ஸர்வப்ரதா

னனை எம்பெருமானுடைய கல்யாணகுணங்களைக் கீர்த்தநம் செய்து அநுபவிக்கின்றாள் இந்த நாயகப்பெண். தங்களுக்கு ப்ரத்யக்ஷமாய் அநுபவிக்கும்படி பரமதயாளுவாய் பரமபோக்யனாய் தங்களோடு கலந்து நின்ற ஸ்ரீ க்ருஷ்ணனுடைய அந்த அவதாரத்தின் விசேஷங்களை மாத்ரமன்றிக்கே பரரூபமென்ன மற்ற விபவங்களென்ன இவைமுதலியவற்றின் விசேஷங்களையும் அநுபவிக்கிறாள். இவ்வநுபவம்

'एष नारायणः श्रीमान् क्षीरार्णव निकेतनः ।
नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मधुरां पुरीम् ॥'

என்கிற இந்த வசநத்தின் க்ரமத்தில் நடைபெறுகின்றது. இதில் 'ஏஷ நாராயண: ஸ்ரீமான்' என்றது 'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்' என்றுதொடங்கி 'நாராயணனே' என்றவரையிலுள்ளவித்தால் பேசப்பட்டது. 'க்ஷீரார்ணவநிகேதந:' என்றவிது 'பார்கடலுள் பையத்துயின்ற பரமன்' என்று இரண்டாம்பாட்டில் குறிக்கப்பட்டது. உத்தரார்த்தத்தில் சொல்லப்பட்ட மதுராபுரீ ப்ராதுர்பாவம்; அதாவது க்ருஷ்ணனாக அவதரித்து ஐந்தாம்பாட்டில் 'மாயனை மன்னு வடமதுரைமைந்தனை' என்றுகூறப்பட்டது. ஸ்ரீக்ருஷ்ணாவதாரமன்றிக்கே மற்ற அவதாரங்களும் க்ஷீரஸமுத்ரசயநரூபத்திலிருந்தே தோன்றியவை என்பர் பெரியோர். இந்த ச்லோகத்தில் க்ருஷ்ணாவதாரத்தைமட்டும் குறித்தது உபலக்ஷணம். ஆகையால் இந்த கோபகந்யை முன் அவதாரங்களில் ஒன்றைக் குறிப்பிட நினைத்தாள். வாமனாவதாரமே முழுமநுஷ்யரூபங்களில் முதலாவதாகையாலும் அது வளர்ந்து த்ரிவிக்ரமரூபமாக மாரினபோதே உலகமெல்லாம் அறியும்படி ஸர்வேச்வரத்வமும் தேவாதிதேவத்வமும் தோன்றியபடியாலும் இந்த அவதாரத்தை மூன்றாம் பாட்டில் எடுத்துக் கூறினாள். மேலும் பலகால் இதைக் கூறுகின்றாளாகையால் இதில் அவளுக்குப் பற்று அதிகமென்பது விளங்குகின்றது. ஜலஸம்ருத்தியைச் சொல்லவந்தவிடத்தில் திருவடியிலிருந்து கங்கையையுண்டாக்கிய இந்த அவதாரத்தைப்பேசுவது மிகவும் பொருத்தமுள்ளதென்று சில புத்திமான்கள் கூறினர்.

நான்முகன் வந்து பூஜித்து 'அவனே ஸர்வஜகத்காரணபூதனான பரமபுருஷன்' என்றும், 'தான் அவன் நாபீகமலத்தில் உண்டானவன்' என்றும் விண்ணப்பம் பண்ணி ஸ்தோத்ரம் செய்ததை 'ஊழிமுதல்வன்' என்றும் 'பாழியந்தோளுடைப் பத்மநாபன்' என்றும் பேசி நான்காம்பாட்டில் ஸூசநமாகக் காட்டினார்.

இனி ஸாக்ஷாத் க்ருஷ்ணாவதாரத்தைப் பற்றிப் பேசப்புகுந்து 'ஆஸுரப்ரக்ருதிகளான துஷ்டர்களின் பாரத்தை ஸஹிக்கமாட்டாமல் அவதிப்பட்ட பூமிதேவியுடன் க்ஷீராப்தி சென்று ஸ்தோத்ரம்செய்து ப்ரஹ்மாதிதேவர்கள் எடுத்துக்காட்டின எம்பெருமான் பெருமையையெல்லாம் வெகு சுருக்கமாக 'மாயனை' என்பதால் குறிப்பிட்டு, மதுராபுரியில் கம்ஸனுடைய காராக்ருஹத்தில் தேவகீவஸுதேவர்களுக்குப் புத்ரனாய்த் தோன்றினதை 'மன்னு வடமதுரைமைந்தனை' என்பதால் வ்யஞ்ஜிப்பித்து வஸுதேவர் தன்குழந்தையான ஸ்ரீக்ருஷ்ணனை அவன் கட்டளைப்படி எடுத்துக்கொண்டு யமுநாநதியைத் தாண்டிச் சென்றதை 'தூய பெருநீர் யமுனைத்துறைவனை' என்றவித்தால் ஸூசிப்பித்து, அதன் பிறகு அவர் குழந்தையை யசோதையின் அருகே விட்டுவர அங்கு அவளும் மற்றவர்களும் அவள் பெற்ற குழந்தையாகவே அதைக் கருதி மகிழ்ந்ததை 'ஆயர்குலத்தினில் தோன்றுமணிவிளக்கை' என்றவித்தால் அறிவித்து. இப்படிப் பரம அநுக்ரஹத்தோடு புத்ரனாய்த் தோன்றிநின்றது மாத்ரமல்லாமல் அவர்கள் கயிற்றினாலுரலோடு சேர்த்துக் கட்டிவைக்கும்படி அவ்வளவு எளிய நிலையில் இருந்தான் என்பதை 'தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரனை' என்றவித்தால் ஜ்ஞாபித்து ஸ்ரீக்ருஷ்ணனுடைய அவதாரத்தின் சிறப்பையும் பாலலீலைகளையும் அநுபவித்தாள்.

இப்படி இந்தத் திருப்பாவைக் கதையில்

'வ்ரதவிதி' என்கிற முதல் அதிகாரம் முற்றிற்று.

இனி 'ஸகீப்ரபோதனம்' அல்லது 'தோழிகளை எழுப்புதல்' என்கிற இரண்டாம் அதிகாரம்.

6. புள்ளும்

பல வரிசைகளுள்ள பெரும் கன்யா கோஷ்டி ஸ்ரீ க்ருஷ்ணன் திருமாளிகைக்குப் போவதற்கு ஆயத்தமாயிற்று. புறப்படுமஸமயம். அப்போது நாயகப்பெண் மற்றவர்களைப் பார்த்து 'எனது அருமைத் தோழிகளே, நம்மவர்யாவரும் வந்து விட்டனரா, யாராவது வராமலிருக்கின்றனரா, என்று சற்று கவனித்துப் பார்த்துச் சொல்லுங்கள்' என்றாள். உடனே அப்பெண்கள் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் பார்த்தார்கள். பலர் வரவில்லை யென்பது தெரிந்தது. யார் யார் வரவில்லை என்பதை மேலும் கவனித்துப் பார்த்துச் சொன்னார்கள். 'நல்லது. கொஞ்சம் பொறுப்போம். அவர்களும் வரட்டும். உடனே புறப்பட்டு விடுவோம்' என்றாள் நாயகப் பெண். இதைக் கேட்ட ஒரு பெண் 'நாம் எதற்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் எல்லோரும் வந்து விடவில்லையா இதைப் போல் அவர்களும் காலத்தில் வருவதற்கென்ன? வீணாக மற்றவர்கள் காத்திருப்பார்களே என்ற எண்ணம் இல்லாதவர்களைப்பற்றி நாம் ஏன் கவலைப் படவேண்டும்?' என்றாள். 'அப்படியன்று அம்மா. ஒரு காரியத்திலும் நாம் அவஸரப் படக் கூடாது. வேண்டு மென்று அவர்கள் வராமலிருப்பார்கள். பரவசமாய் தூங்கிக் கொண்டிருப்பார்கள். என்ன செய்வார்கள் பாபம். விழித்துக்கொண்டு, நாழியாகி விட்டது என்று தெரிந்தவுடனே நம்மையெல்லாம் காக்க வைத்ததைப் பற்றி வருந்தாமலா இருப்பார்கள்? அவச்யம் வருந்து வார்கள். அவர்கள் வராதமுன் நாமெல்லோரும் ஸ்ரீ க்ருஷ்ணன் அரண்மனைக்குச் சென்று அவனை ஸேவித்தோமானால் நம்மோடு கூடி இந்த ஆநந்தத்தை அநுபவிக்காமல் வஞ்சிக்கப்பட்டுப் போனோமே யென்று அவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றமும் வருத்தமும் ஏற்படு மென்று நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்' என்று சாந்தமாகவும், ஸாமர்த்தியமாகவும் ஸமாதானம் கூறினாள். அதன் பிறகு மற்றொருவள் 'நீ சொல்வது ஸரிதான். ஆனால் நாம் எதுவரையில் காத்துக்கொண்டிருப்பது? ஒரு ஸமயம் அவர்கள் விடியுமளவும் தூங்கிக்கொண்டிருக்கலாம். அப்படியாகில் நாம் என்ன செய்வது? குறித்த காலத்தில் நாம் போகாமல் போனால் க்ருஷ்ணன் நாம் வரவில்லை யென்று எண்ணி துயிலெழுந்து காலைக் கடன்களை முடிக்கவும், வேறு கார்யங்களைப் பார்க்கவும் போய்விடமாட்டாரோ. தாமதிக்காமல் உடனேபுறப்பட்டுப் போவதுதான் உசிதமென்று எனக்குத்தோன்றுகிறது என்றாள். இது உண்மை என்று ப்ரதான கோப குமாரிக்குத் தோற்றிற்று. இப்படி விஷயத்தைத் தெளிவாக ஸமயத்தில் எடுத்துக் கூறியதைப் பற்றி அந்தப்பெண்ணை ச்லாகித்து விட்டு என்ன செய்பலாமென்று சிறிது ஆலோசித்தாள். உடனே ஒரு தீர்மானம் செய்து கொண்டு 'நல்லது. புறப்படுங்கள். நேராக அரண்மனைக்குப் போகாமல் வீதி வலமாகப் போவோம். வராதவர்களை அவரவர்கள் வீட்டிலேயே எழுப்பி அழைத்துக்கொண்டு போவோம். நாமும் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்களையும் விட்டுப் போகவேண்டியதில்லை' என்றாள். அப்பொழுது சில பெண்கள் நாயகப் பெண்ணையும், மற்றவர்களையும் பார்த்து 'நேற்றே நமது தோழிகளில் பலர் ஊர்வலமாகத்தான் போகவேண்டு மென்றும் அதைஉங்களிடத்தில் சொல்லும்படியும் சொன்னார்கள். நாங்கள் மறந்து விட்டோம். அப்படியே செய்வோம்' என்றார்கள். உடனே யாவரும் வீதியைச் சுற்றிவரப் புறப்பட்டார்கள்.

சற்று தூரம் போன பிறகு வராத பெண்களில் ஒருத்தியின் வீடு தோன்றிற்று. உடனே இந்த மாபெருங் கோஷ்டி நிச்சப்தமாய் அவ் வீட்டின் எதிரில் நின்றது. அந்த க்ஷணத்தில் அங்குள்ள மரங்களின் கிளைகளை வாஸஸ்தானமாகக் கொண்ட பக்ஷிகள் உறக்கம் நீங்கி எழுந்து வழக்கம் போல் இனிது சப்தித்தன. பக்ஷிகளின் சப்தம் ஸாதாரணமானதன்று. அதற்கும் மனிதர் வாழ்க்கைக்கும் நெருங்கிய ஸம்பந்தம் உண்டு. அதற்கு எவ்வளவோ அர்த்த முண்டு. நமக்கு நேரக்கூடிய நன்மை தீமைகளை முன்னமே அறிவிக்கும் குறிகளைச்

(தொடரும்)

ஸ்ரீ:

ப்ரணய கலஹம்

இதை ஊடல் என்று தமிழர் சொல்லுவர். நாயகனுடன் ஸுகித்திருந்து பிறகு பிரிவினால் நோவுபடும்பெண்கள் நாயகன்வந்து முகங்காட்டினவளவிலும், ‘அவன் இத்துணைகாலந் தங்களை உபேக்ஷித்தது, மற்றுள்ள மாதரிடம் அவன் மனம் மையல் கொண்டதாலேயே’ என்றாற்போல் சில காரணங்களைத் தாங்களே கல்பித்துக்கொண்டு அவனிடம் தங்கள் கோப தாபங்களை வெளியிடுவதே ப்ரணயகலஹமாகும். பெருமாள் காடேற எழுந்தருளும் ஸமயம், பிராட்டியும் புறப்படப்புக, பெருமாள் பலபடிகளாலும் அவளைத் தடுத்து நிறுத்தினர். அப்பொழுது பிராட்டி, பெருமாளிடம் தனக்குள்ள காதல்மிகுதியாலும், ‘நம்முடையவரன்றோ, நாம் சொன்னபடி கேட்குமவரன்றோ’ என்கிற அபிமாநத்தாலும் ரகுவீரனாகிய பெருமாளையும் மேலிட்டு வார்த்தை சொன்னாள். (ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிக்ஷேப ராகவம்) என்ன சொன்னாள்? ‘கிம் த்வாமந்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப: | ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்’ என் தமப்பனார் உம்மை என்ன நினைப்பர்? ‘ஒருவனுக்கு ஒருத்தி தாங்கவொண்ணாச் சுமையோ? அவளை இங்கே நிறுத்திப்போவது ஆண்மை இல்லாமையே ஆகும். ஆகவே பெண் ஒருத்தி ஆணுடை உடுத்தி என்மகளை மயக்கிக்கைப்பிடித்துப்போனதாகாதோ என்றும்மை வெறுப்பர். ஆக என்னை அழைத்துப்போகப்பாரும்’ என்றாள் பிராட்டி. இப்படியாகப் பலவிடங்களிலும் ஊடினமை காணலாம்.

நம்மாழ்வார் 6ம் பத்து 2ம் திருவாய்மொழி அருளிச்செய்யுமிடத்தில் பெருமாளைக் கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டியின் தசையை யடைகிறார். அப்பிராட்டி பல பறவைகளை பெருமாளிடம் தூதுவிட்டாள் கீழ்த் திருவாய்மொழியில். அவைகள் சென்று அறிவித்து அவன் வருவதற்கு முன்னமே இவள் பிரிவின் கொடுமை தாளாது ஓர் தீர்மானம் செய்துவிடுகிறாள். ‘அவன் வந்துகலந்தாலும், பிறகு அது பிரிவில்லது மற்றதில் முடிவடையாது. ஆக புதியதொருபிரிவின் கொடுமையை அநுபவிப்பதிலும் இந்த முகம் பழகிய முந்தய நோயே அமையும்’ என்று. ஆகவே அத்தீர்மானத்தையநுஸரித்து, தோழிமாரும் தானும் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் உள்ள அவனுக்கும், ஒன்றும்செய்து உட்புகுரமுடியாதபடி சில வ்யவஸ்தைகளைச் செய்துகொண்டார்கள். ஒரு பூம்பொழிலாய் அதன் நடுவே ஒரு செய்குன்றமாய், அதிலும் ஒரு மநோஹரமண்டபமாய், அதிலே இவர்கள் எல்லோரும் நெருங்கக் கூடி கழகமாய் இருந்தார்கள். இந்நிலையில் அவன் வந்தாலும் தன்னழகைக் காட்டி இவர்களை வசப்படுத்தவொண்ணாது. கண்ணழகில்வந்தவாறே பிராட்டி பெருமாளையும் விஞ்சியிருப்பது ப்ரஸித்தமிறே. (தஜ்ஞேயவேலி தக்ஷணா) தன் மேன்மையைக் காட்டி இவர்களை காற்கடைக்கொண்டு வசப்படுத்துவதும் உசிதமன்று. ம்ருதுஸ்வபாவர்களாகையாலே அந்த:புரத்துஜநங்களை ஆனைக்காலிலிட்டு துகைப்பித்தாற்போல் செய்யக்கூடாதன்றோ. இனிமேல் அவன் இவர்களுடைய பூவை, கிளி துடக்கமான் விளையாட்டுப் பறவைகளுடன் கொஞ்சிக்குலவி அதன்மூலமாய் இவர்களுடைய அபிமானத்தைப் பெற முயலலாம். ஆனால் அதற்கும் இடமில்லாதபடி பூவை, கிளி, பந்து, கழல் முதலிய ஒவ்வொன்றையும் இவர்கள் மிகுந்த கருத்துடன் ஊரை அழிக்கும் பெரும் போர்கள் நிகழும்பொழுது அரணுள்ள கோட்டைகளில்சரக்கைக்குவித்துவைப்பாரைப்போல் ஓரிடத்தில் ஒளித்திட்டார்கள். இப்படி இவர்களுக்குள்ளபகவத்ப்ரேமமேபகவத்த்வேஷமென்னலாம்படி பரிணமித்தது. ஹிரண்யாதிகளின்

கோஷ்டியை ஒத்திருந்தது எனவும் கூறலாம்.

இவர்கள் திறத்தில் பெருமாள் திருவுள்ளமோ வேறுவிதமாய் இருந்தது. கஜேந்த்ரனுடைய கூக்குரல் காதில் விழுந்தபொழுது திருவடிநிலைகளைக் கோத்துக்கொண்டு எழுந்தருளாமல் பத்தெட்டு அடியிட்டும் திவ்யாந்த:புர மஹிஷிகள், 'இது என்ன? பரந்த உலகனைத்தையும் நினைத்தவளவிலே படைக்கவல்ல பெருமாளுக்கு இவ்வளவு பதற்றம் வரக் காரணம் என்?' என்று வியந்து கை நெருக்கும்படியும், பெரிய திருவடியைப் பண்படுத்தாமல் அவருடைய வெறும் தோளில் ஏறிப்பாய்ந்திடும்படியும், 'ஸம்ப்ரமாத் ஸஹஸா(அ)யயௌ' என்று பெரியோர்கள் ஈடுபடும்படியும் மிகுந்த வேகத்துடன் வந்து தோன்றினாற்போல் தோன்றி, ஆபத்காலங்களில் ஆச்ரிதரை மிகவும் ஆதரிக்கும் ஸ்வபாவமுள்ளவனாயிருந்தான் அவன். 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:' என்று ஸாமாந்யராய் இருப்பார் நோவுபடினும் காணப்பொறுக்காதவன், தன்னுடைய ப்ரியநாயகி படும் நோவை எங்ஙனம் கேட்டு ஆறியிருப்பன்! 'நாம் பக்கத்திலிருந்து கையைக்காலைப் பிடித்துவிடவேண்டிய ஒருத்தி கண்டவைகளின் காலில் விழுந்து தூதுவிட்டு அலமர்ந்துப்போவதே! நாம் அல்பம் தாழ்ந்து ஆளிட்டழைக்கவேண்டும்படி ஆனமை நமக்குப்பெரிய ஆண்மைக்கேடன்றோ. நாம் இனி இங்கிருந்தென்? அங்கு போய்ச் செய்வதென்? என்று தடுமாறிப் பலவாறு சிந்தித்துக் கடைசியில் இவர்கள் இருந்த இடத்தேற வந்துசேர்ந்தான். இவன் அணுகி வருவதாலே திருமேனி ஒளிபட்டு அவர்கள் இருந்தவிடம் முற்றிலும் 'ராமாகமந ஸம்பூதம் தீப்யதே ஸஹஸா தேஜஸா' என்று சக்ரவர்த்தித்திருமகன் வருகையாலே தண்டகாரண்யம் அடங்கலும் விளக்கேற்றப்பெற்றபடி ஆனாற்போல, மயிர்க்கழுத்துச்சாயலாய் மாறிப் பேரழகுபெற்றது. இவனுடைய கடைக்கண் பார்வைகளைத் தொடர்ந்து பெற்ற அவர்களும் தாங்களறியாமலே அவற்றின் குளுமையாலே மயிர்ச்சிலிர்க்க மெய்மறந்து நின்றார்கள். இத்தகைய அடையாளங்களைக்கண்டு அவன் வந்திருப்பதாய் தீர்மானித்து, இவர்கள் முன்னிலும் தங்கள் மனத்தை முடுக்கி, முகம் மாறவைத்து உபேக்ஷித்திருந்தார்கள். இந்நிலையில் அவன் செய்யவடுப்பது என்ன? எதிரிகளிட்ட கல்மதிளாகில் தகர்த்துப்புகலாகும். அங்ஙனன்றே இது.

இங்ஙனம் இவன் அவர்களைக் கிட்டப்பெறுமையாலும், பெற்றல்லது ஜீவிக்கப்போகாதாகையாலும், கால் தரையில் பாவாதபடியாய் தடுமாறிவருகிற ஸமயத்தில் இவன்செய்தபாக்யவிசேஷத்தாலே அவர்கள் மறந்துபொகட்டுப்போன பந்தும், கழலும் இவன் காலில் தாக்குண்டன. இருட்டு உள்ளில் திருட்டுத்தனமாய்த் துழாவிவாராநிற்க, கையில் உறியும், வெண்ணெயும் தாக்கினால் திருப்தியடையுமாப்போல் மிகவும் ஆநந்தப்பட்டு அவைகளை மேல் விழுந்து எடுத்து கண்களில் ஒற்றிக்கொள்வது, தலையில் வைத்துக்கொள்வதாய், அவர்களிடத்தில் காட்டவேண்டிய ப்ரீதிகள் அனைத்தையும் இவைகளிடத்தில் காட்டிக்கொண்டுநின்றான். அந்நாள் திருவாழிமோதிரம் கிடைக்கப்பெற்ற பிராட்டி பட்டதத்தனையும் இவன் பட்டான். இத்தை உணர்ந்தனர் அவர்கள். இவன்செய்யும் தந்திரம் கண்டும் பேசாதிருந்தால் இவன் நாம் செய்துகொண்ட வ்யவஸ்தைகளனைத்தையும் தகர்த்திடுவன் என்று பயந்து, 'மின்னலைப்போன்ற இடை உடையவர்களான உன்னுடைய மற்ற ப்ரிய நாயகிகளுக்கு இங்கு நீ செய்வது தெரிந்துவிடில் உன்னையவர்கள் என் செய்வார்களோ? என்று நாங்கள் மிகவுமஞ்சுகிறோம். (பிறர்களுக்கு வரும் இடர்கண்டு நாங்கள் ஸஹிக்ககில்லோம். உன்னைப்போலன்று காண் நாங்கள்.) நான் பிராட்டிக்காக இலங்கை அழிக்கவில்லையா என்பாய். அது பிராட்டிக்காகச் செய்தது அன்று. உன்னுடைய சுயநல மனப்பான்மை எங்களுக்குத் தெரியும். இனி அதுகொண்டு எங்களை ஏமாற்றமுயலாதேகொள். எங்களுடைய பந்தும் கழலும் தந்துபோகு நம்பி! என்று அவனை இவர்கள்

திரஸ்கரித்தனர்.*

இவ்வாறாக அவர்கள் நோக்குப்பெறாதவன் கடைசியாக முகம் பார்க்கப்பெற்றான். அவர்களின் வார்த்தையைக்காதால் கேட்கப்பெறாதவன், 'நம்பீ' என்னவும், 'போ' என்னவும் பெற்றான். இதனிலும் பெரியபாக்யமுண்டோ அவனுக்கு. போ என்று சொன்னால் அவ்வார்த்தையைமட்டும் அன்று அவன் கவனிப்பது. அங்ஙனாகில் உடனே போய்விடுவனே. பின்னை? போ என்னும்பொழுது அது சொல்லுவார் நெஞ்சில் ஓடுவது ஒன்றையே பார்க்குமவனிறே இவன். ஆகையாலே அவர்கள் தன்னுடன் ஊடுவது அறிந்து போ என்றவுடன் அங்கேயே இருக்கப்புகுந்தான். போ என்றால் இருக்கப்புகுந்தவன் 'தீண்டாதேகொள்' என்றால் என்ன செய்திருப்பானோ? யாமறியோம்.

அருளிச்செயல்களை பகவத்ஸந்நிதிகளில் அர்த்தபாவத்துடன் அபிநயித்துப் பாடுவது உண்டு. இப்பொழுதும் 'அரையர்கள்' என்ற சிறப்புப்பெயர் பெற்ற பெரியோர்கள் ஆடிப்பாடிப் பெருமாளை மகிழ்விப்பதை, திருவரங்கம் முதலிய திருப்பதிகளில் திருமொழித்திருவாய்மொழித்திருநாள்களில் காணலாம். விசேஷஅபிநயங்களுடன் அவர்கள் பாட்டிசைப்பதை 'முத்துக்குறி' என்று இக்காலத்தில் வழங்குகிறார்கள். இம்மாதிரியான ஒரு ப்ரகரணத்தில் 'உய்ந்தபிள்ளை' என்ற ஒரு பெரியவர் பெருமாள்திருமொழியை அபிநயித்துப் பாடாநின்றார். 'இன்னம் என்கையத்தீங்கு ஒரு நாள் வருதியேல் என் சினம் தீர்வனே' என்ற அடி அங்கு ப்ரஸ்துதமாயிற்று. 'இன்னமும் ஒரு நாள் என் கையகத்தே நீ அகப்படப்போகிறாய். (மாதருடன் கூடுவதில் நீ ஓர் உறுதிப்பாடுடையவனன்றல்லவா?) அப்பொழுது நான் (உன்னைச் சிலது செய்து) என்கோபம் தீர்வேன்' என்று ஒரு பிராட்டி பெருமாளை ஏசுவது அதன் பொருள். இவ்வர்த்தத்துக்குச்சேர அந்தப்பெரியவர் காலாலே உதைப்பது, கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக்காட்டினார். 'ஊடலிழைக்கும் பிராட்டிகையில் அவன் சிக்குண்டால் இவ்விதம் அவனைச்செய்தல்லவா அவள் சினம் தீரவேண்டுமென்பது அப்பெரியாரின் எண்ணம்போலும். உடனிருந்து எம்பார் இத்தைக்கவனித்தருளினர். அவர் 'அங்ஙனன்றுசினம் தீருவது. கையாலே காலாலே தீண்டப்பெற்றானாகில், அதுவன்றோ அவனுக்குப் பெரும் புருஷார்த்தம். அது பெறவேண்டியன்றோ நெடுநாள் அவன் காத்துக்கிடந்தது. ஆனபின்பு அது பொருளன்று. பேச்சுக்கொடாதிருத்தல், முகம்மாறவைத்துக்கொள்ளுதல் முதலிய உபேக்ஷைகள் இங்குப் பொருளாக வேண்டும். ரஸிகனும் மிகுந்த த்வரையுடன் வந்தவனுமான நாயகனுக்கு அவள் செய்யும் உபேக்ஷைகள்உயிரை நலிந்தாற்போலவன்றோ இருப்பது' என்றருளிச்செய்தாராம். காமசாஸ்த்ரம் கற்று போகிகளாய் இருப்பார் சிலர் அறியக்கூடிய பொருளாகும் இது. பால்யமே தொடங்கிபுறம்புள்ளவிஷயங்களில் துளிருசியுமின்றி வைராக்ய பூஷணராய் விளங்கிய எம்பார் இதை அறிந்து வெளியிட்டது ஆச்சர்யமே! 'ஸ்த்ரீகளுக்கு அஸாதாரண சின்னங்கள் இருக்கும்படி எங்ஙனே' என்று எம்பார் அதறியவேண்டிய நிர்பந்தம் நேர்ந்தபொழுது சிங்கப்பிரானைக் கேட்டருளினர் என்று ப்ரஸித்தமாயிருக்கும். 'ருச்யச்ருங்கர்' என்னும் ருஷிகுமாரன் ஸ்த்ரீகளையும், அவர்கள் கொணர்ந்துகொடுத்த கொழுக்கட்டை முதலியவைகளையும் முதன் முதலாகப் பார்த்தபொழுது தன்னுடைய லௌகிகவஸ்துஜ்ஞானத்தை விலக்ஷணமாய் வெளியிட்டுக்கொண்ட கதை ராமா

---

*இப்பொருள் கொண்ட பாசுரம் வருமாறு:—

மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார் முன்புநானதஞ்சுவன்
மன்னுடையிலங்கை அரண் காய்ந்த மாயவனே!
உன்னுடைய சுண்டாயம் நானறிவன் இனியது கொண்டுசெய்வதென்?
என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ!

யணத்தில் ப்ரஸித்தமானதே. 'ஹவிநீதி ஸூந்ருதே' என்று கொழுக்கட்டைகளை மரங்களில் பழுத்த பழங்களாய் நினைத்தானும். 'உங்களனைவர்க்கும் இங்கு பூஜையை நடத்துகிறேன்' என்ற பொருளில் ஸம்ஸ்க்ருதவாக்யத்தை, அவர்களை நோக்கிச் சொல்லும்பொழுது 'ருஷிப்யோ வோ(அ)த்ய வ: பூஜாம் தேவா ஸர்வேஷாம் விதிவத்தேவகம்' என்றானும். இதில் ஸர்வேஷாம் (அனைவர்க்கும்) என்ற பதம் ஆண்பாலில்தான் ப்ரயோகிக்க உரியது. பெண்பாலில் ஸர்வாஸாம் என்னவேணும். 'இவர்கள் பெண்கள்; என்றறியாதவனாகிய அவன் எங்ஙனே 'பால் வித்யாஸத்தை உணர்ந்து ப்ரயோகிக்கமாட்டுவன். அவன்'படியிலே இருந்தார் எம்பார். ஆயினும் தன் உழைப்பினால் தான் ஜ்ஞாநம் பெற்று வ்யவஹரிக்கும் பொழுது இம்மாதிரி மனிதருள் புத்திதாரதம்யம் காணலாகும். ஈச்வரன் அநுக்ரஹிக்க அதன் மூலமாய் ஜ்ஞாநம் பெற்ற ஆசார்யர்களுக்கு எந்த விஷயத்தையும் அறிய ஒருவித அருமையும் இல்லையன்றோ.

ஆக இவ்விதம் இவர்கள் போ என்றதையே பற்றாசாகக்கொண்டு, பரமப்ரீதியுடன் அவன் இவர்களை நோக்கி கண்களில் ஒருவித மலர்ச்சியுடன் புன்முறுவலும் செய்து நெருங்கிவந்தான். அப்பொழுதும் இவர்கள் 'நம்பீ! உன் கண்ணழகையும் மந்தஹாஸத்தையும் காட்டி எங்களை வாழ்விக்கவோ நீ நினைப்பது. இவைகளைக்கண்டு மாய்வதற்கே நாங்கள் பிறந்தவர்கள். ஆசையால் உன் ப்ரியநாயகிகள் தங்கள் காதிலே அந்த சப்தத்தைக்கேட்டு, உன்னிடம் வந்துசேரும்படியாக மாடுகளை அழைக்கும் வ்யாஜமாய், அங்கே போயிருந்து, குழல் ஊதுவாயாக' என்று அவனை முன்போலவே திரஸ்கரித்தார்கள்.* இப்படியாகச் செல்லுமிடத்தில் தன்னுடைய ஒப்பற்ற அழகாலும் சத்ருக்களையும் ஈடுபடுத்தவல்ல இனிய குணங்களாலும், அவர்களை ஒழியத் தனக்குச்செல்லாமையாலும், தாழ்ந்துவிட்டுக்கொடுக்கும் நீர்மையாலும் பிராட்டியினுடைய ஊடலைத் தீர்த்து, அவளோடு கலந்தருளினன் ஸர்வேச்வரனென்னுமிவ்விஷயத்தை இத்திருவாய்மொழி (6ம் பத்து 2ம் திருவாய்மொழி) வெளியிடுகிறது.

பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த ஈடு முதலிய வ்யாக்யாநங்களிலிருந்து விஷயங்களைக்கூட்டியும், குறைத்தும், வேறு விஷயங்களைக்கொண்டு விளக்கியும், பலவிடங்களில் பரந்துகிடந்தவைகளை ஓரிடத்தில் தொகுத்தும் இக்கட்டுரை எழுதப்பட்டது. இதில் கூறினவைகளை ஒருவர் அல்லது இருவர் தம்முடைய பகவதநுபவத்துக்கு உற்ற துணையாகக் கொண்டிட்டாலும் இது எழுதப்புகுந்த பயன், பெறப்பட்டதாகவே கருதலாம்.

---

*இக்கருத்துடைய பாசுரம் இதுதான்:—

போகுநம்பீ! உன்தாமரைபுரைகண்ணிணையும்செவ்வாய்முறுவலும்
ஆகுலங்கள்செய்ய அழிதற்கே நோற்றோமோ யாம்
தோகைமாமயிலார்கள் நின்னருள் சூடுவார் செவியோசைவைத்தெழ
ஆகள்போகவிட்டுக்குழலூதுபோயிருந்தே.

ஸ்ரீ:

ஸ்ரீமத்ராமாயணதத்வ விமர்சம்

ஒவ்வொருவனும்தான் ஸுகமாக இருக்கத்தான் ஆசைப்படுகிறான். ஆனால் எல்லோரும் ஸுகமாகவே இருப்பதைப்பார்க்கவில்லை. அதற்குக்காரணம் அந்தந்த ஜீவாத்மா செய்தவினைப் பயனுக்குத் தக்கவாறு ஸர்வேச்வரன் சரீரங்களையும் ஸுகதுக்கங்களையும் கொடுப்பதேயாம். நம் முயற்சியால்மட்டும் நம் இஷ்டத்தை அடையமுடியாது. கருணைக்கடலான பகவானின் அநுக்ரஹத்தால்தான் நாம் எந்த நன்மையையும் அடையமுடியும். எந்த மனிதனும் துக்கத்துக்கு ஹேதுவான பாபச்செயலைச் செய்யாமலிருக்கமுடியாது. (ஒருவனும் ஒருவேலையும் செய்யாமல் ஒருகணப்பொழுதும் இருத்தல்முடியாது) என்று கண்ணன் கீதையில் எழுதிய அந்த பாபச்செயலுக்கு பலமான துக்கத்தை அவசியம் அநுபவித்தே தீரவேண்டும். துக்கத்தை அநுபவிக்க யாரும் இஷ்டப்படுவதில்லை. ஆகையால் அக்கஷ்டத்தை விட்டு பிறவிக்கடலைத்தாண்ட எம்பெருமானின் க்ருபையை ஸம்பாதிக்கவேண்டும். அந்த பகவான் எல்லாம் வல்லவர். கருணைக்கடல். எல்லாமறிந்தவர். வேறொரு உதவியின்றி தானாகவே நேரில் அறிபவர். அவருக்கு உகப்பான கார்யத்தைச்செய்தாலவர் ஸ்வதந்த்ரராகையால்நமதுகுற்றங்களை மன்னித்து அவசியம் நம்மைக் காப்பாற்றுவார். அவருடைய அருளை ஸம்பாதிக்க பல வழிகளுண்டு. அதில் அவர் அவதாரசரித்திரங்களைபடிப்பது, கேட்பது இவைகள் ஸுகமானது. அவருடைய அவதார சரித்திரங்கள் அவருடைய தயை, ஶரணாகதஸம்ரக்ஷணம் முதலிய குணங்களை வெளிப்படுத்துகின்றன. அவருடைய அவதார ரஹஸ்ய ஜ்ஞானமே மோக்ஷம் தருமென்று கீதையில் கண்ணன் பணித்தார்.

இவ்வவதாரங்களில் முக்யமானது ஸ்ரீராமாவதாரம். ஸ்ரீராமன் முதலியவர்களின் உயர்ந்த செயல்களை ஆதிகவியான வால்மீகி ஆதிகாவ்யமான ஸ்ரீமத்ராமாயணத்தில் விஸ்தாரமாக வர்ணித்திருக்கிறார். பகவானுடைய கணக்கற்ற கல்யாணகுணங்கள் தெரியாவிட்டால் பகவானிடம் எப்படி பக்தி வரும்? அவன் திருவடிகளை ஶரணமாக அடைவதுதான் எப்படி? இந்த ஸ்ரீமத்ராமாயணம் பூமியில் அவதரித்த ஆச்சர்யத்தை சற்று நோக்கினால் இதன் பெருமை நன்கு விளங்கும். ப்ரஹ்மாவின் உலகத்தில் வெகுவிஸ்தாரமாக இருக்கும் ராமாயணத்தை மநுஷ்யலோகத்திலும் வளரச்செய்து அதனால் மநுஷ்ய உலகமும் உய்யவேணுமென்கிற தயவினால் ப்ரஹ்மா நாரதமுனிவரை பூமிக்கு அனுப்பி பரமபக்தரான வால்மீகிக்கு ராமசரித்திரத்தை உபதேசித்து வரும்படி அனுப்பினார். ஆசார்யர்களை அடைய பல காரணங்களில் யதிருச்சையாயேற்பட்ட ஸுக்ருதமும் ஒன்றல்லவா? அதனாலே வெகுகாலமாய் பரதத்வம் ராமன் தானா என்றும், இவன் தான் பரதத்வமாய் இருக்கவேண்டும் என்றும், இதை ஆசார்யன் முகமாக அறிய வேண்டுமென்றும் எதிர்ப்பார்த்த வால்மீகியின் ஆச்ரமத்துக்கு குருவான நாரதர் வந்தது. இது வால்மீகியினுடையவும் நம்முடையவும் அதிர்ஷ்டமென்று சொல்லலாம். குருவைத் தேடி சிஷ்யன் போவது ஶாஸ்த்ரமும் உலகவழக்கமுமாயிருக்க குருசிஷ்யனிடம்தேடிவந்ததால்பகவத்பக்தனான தகுந்த சிஷ்யனாயிருந்தால் குருவும் சிஷ்யனிடம் வருவார் என்பது தெரிகிறது. குருவை அடைந்தவன் தான் உயர்ந்த மனிதன். குருவினிடம் பெற்ற வித்யைதான் நிலைத்திருக்கும் என்கிற வேதத்திற்கு இணங்க நாரதரை வால்மீகி கேட்கிறார்.

கேட்கும் விஷயம் உலகத்திலுள்ள ஸாமான்யமான கதை போன்றதன்று. உபநிஷத்துக்களிலே உத்கோஷிக்கப் பெற்ற பகவானைப் பற்றியது என்பது விளங்க குருவின் பெருமையும் சிஷ்யனின் பெருமையும் முதல் ச்லோகத்தால் வர்ணிக்கப்படுகிறது. ஸகல வேதங்

களையும் அத்யயநம் செய்தவரும் தபம் செய்து வருபவரும் ப்ரஹ்மாவின் குமாரர்களில் முக்யருமான நாரதர்தான் ஆசார்யர். பலவேதங்களைக் கற்றிருந்தாலும் அதன் அர்த்தத்தையும் கருத்தையும் தெரிந்து கொள்ளாவிட்டால் முழுப்பயனையும் அடைய முடியாது. அக்ஷரராசியை அறிந்ததே ஒரு விசேஷமானாலும் அர்த்தம் அறிந்தால் அதன் பயன் அதிகமல்லவா. (விறகு எவ்வளவு காய்ந்ததாயிருந்தாலும் நெருப்பு இல்லாமல் எரியாதது போல் அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் வெறும் வேதஶப்தத்தைச்சொல்வது என்றார் பெரியோர்.) இன்றுமிந்த நாரதர் மனிதர்களிடம் இருக்கும் அஜ்ஞாநத்தைநீக்கி ஜ்ஞாநத்தைக்கொடுப்பவர். மஹதீ என்னும் வீணையை மீட்டிக்கொண்டு ஆகாயத்தில் செல்லும்போது நாராயணனின் குணங்களைப்பாடி அதைக்கேட்கும் ஜனங்களுடைய பாபத்தைப்போக்கி எம்பெருமானிடம் பக்தியை உண்டாக்குகிறார். தாமும் இடைவிடாமல் பகவானை த்யானிப்பவரில் தலைசிறந்து விளங்குகிறார். இதனால் ஆசார்யன் வேதம் நன்கறிந்தவராயும், விஷ்ணு பக்தராயும், எந்த விதத்திலும் பிறரிடம் அஸூயையில்லாதவராயும், பிறர் குணத்தைக்கண்டு ஸந்தோஷப்படுபவராயும், இருக்கவேண்டுமென்ற ஆசார்ய லக்ஷணமும், ஶாஸ்த்ரத்தின் அர்த்தங்களை குருவாயிருப்பவர் நன்றாய் அலசிப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்; தன் சிஷ்யர்களை நல்லமுறையில் நடக்கும்படிச் செயய வேணுமென்றும், நல்ல ஆசாரங்களையே தானும் அநுஷ்டிக்கவேண்டுமென்றும் ஆசார்யலக்ஷணமும் சொல்லப்பட்டது. இதைக்கேட்கும் சிஷ்யர் வால்மீகி— இவர் முன்ஜந்மத்தில் வேடனாகவிருந்து, ப்ராணிகளை ஹிம்ஸித்துவந்தார். ஜாயமானகடாக்ஷத்தால் ஸப்தர்ஷிகள் தாரகமந்த்ரமான ராமமந்த்ரத்தை உபதேசிக்க, அதனால் கெட்டகார்யங்களை நிறுத்தி தவம்செய்யலானார். அதிகவருஷங்களாய்விட்டதால் அவர்மேல் புற்று முளைத்துவிட்டது. வருணனால் மழையினால் புற்று கரைந்து தவம் பூர்த்தியானதும் வெளிப்பட்டதால் ப்ராசேதஸ்என்று பெயர்பெற்றார். இவர் ப்ருகுகுலத்தில் பிறந்தவர். ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனும் இவரை 'வஸுதாச்ரோத்ரஜந்மா' என்றார். பூமிக்குக் காதுஸ்தானத்திலுள்ள புற்றில் உண்டானவனென்றும், பூமியிலுண்டானவர்களுடைய காதுகளை ராமகுணத்தால் பூரணம்பண்ணவே ஜந்மாவை எடுத்தவர் என்றும் மிகவும் ரஸம் ஏற்படும்படி இச்சொற்றொடர் அமைந்திருக்கிறது. கேட்பவரான சிஷ்யரும் தபஸ் செய்பவர், வேதம்கற்றவர் என்பதால் கேள்வி உலகத்திலுள்ள ஸாமாந்ய அரசனைப்பற்றியதன்று என்பதும். பரதத்வம் மற்றதேவதைகளா? ஸ்ரீமந்நாராயணனா? என்ற ஸந்தேஹத்தைக்கேட்டு, நாராயணனேபரதத்வம் என்று உலகத்தாருக்கு விளங்கவைக்கவேதான் இந்தக் கேள்வி என்பதும் குருவுக்கும் சிஷ்யனுக்கும் சொன்ன அடைமொழிகளால் நன்றாய் தெரிகிறது. சிஷயன் ஶாந்தனாக குருவின் ஸமயமறிந்து நற்குலத்திற்பிறந்த ப்ரஹ்மநிஷ்டனான குருவினிடம் குருவுக்குவேண்டிய ஸமித்து முதலியவைகளை எடுத்துக்கொண்டு கொடுத்து வணக்கத்துடன் கேட்டால், ஆசார்யர்கள் ப்ரஹ்மவித்யையை உபதேசிப்பார்கள் என்று ஶாஸ்த்ரம் சொன்னபடி செய்தார். இங்கு ஒரு ஸம்சயம் வரலாம். ப்ரஹ்மவித்யையை உபதேசிப்பதானால் ஒருவருஷம் அவன் அதற்குத் தகுதியுள்ளவன்தானா என்று பரீக்ஷிக்கவேண்டும். தகுதியுள்ளவனுக்குச் சொல்லாமலிருக்கக்கூடாது. தகுதியற்றவனுக்குச் சொல்லவும் கூடாது. இப்படியிருக்க நாரதர் ஏன் உடனே உபதேசித்தார் என்றால், இந்த நியமம் மூத்தபிள்ளைக்குக் கிடையாது. அவன் குணம் பிறந்ததுமுதல் கூடவேயிருக்கும் தகப்பனுக்குத் தெரிந்திருக்கவேண்டுமல்லவா? இந்த வால்மீகி தன் தம்பியான ப்ருகுவின் புத்ரரானகையால் தன்பிள்ளையாகவேபாவித்து உபதேசித்தார். தவிர ப்ரஹ்மதேவரின் நியமனத்தாலும் தான் அயோநிஜராக ப்ரஹ்மாவின் மடியிலிருந்து உண்டாகி முக்காலமுமுணர்ந்தவராகையாலும் ராமபக்தரான வால்மீகி தத்வோபதேசத்துக்குத் தகுதியுள்ளவரென்றறிந்து உடனே உபதேசித்தார். ஒரு க்ரந்தம் ஆரம்பித்தால் மங்களாசரணமவச்யம் வேணு

ஸ்ரீ:

மால்கொண்டமகிழ்மாலைமார்பினன்

பெருமாள் மகுடம் சாய்க்கும்படிக்குக் கவிசொலும் ஞானத்தமிழ்க் கடலாகிய குருகைக்கோன் சடகோபன் ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸாரமாகிய திருவாய்மொழியைப் பாடத்தொடங்கி பரம புருஷனுடைய பரத்வத்தை முதல் தசகத்தில் திருவாய்மலர்ந்தருளி, இரண்டாவது தசகத்தில் விருப்பு வெறுப்பற்று என்றும் எங்கும் ஸமநோக்குடைய பரமனது கலியாண குணத்தைப் பரக்கப் பேசியருளினர். மூன்றாவது தசகத்தில் மேலே சொல்லப்பட்ட பரமபுருஷன் அனைவரும் ஆச்ரயிக்கும்படி மிகுந்த ஸௌலபன் என்பதை அருளிச் செய்ய ஆரம்பித்த ஆழ்வார், அவன் ஆச்ரிதர்க்கே ஸௌலபன் அல்லாத பிறர்க்கு அவன் அறிவதற்கரியவன் என்பதையும் அருளிச் செய்கிறார்.

அவ்வாறு பேசியருளும்போது பரமனின் ஸௌலப்யத்திற்கே எல்லை நிலமான ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தின் பால்ய லீலைகளை நினைந்து நைந்துள்கரைந்துருகும் ஆழ்வார் தேவர்க்கும் வேதத்திற்கும் எட்டாத பரம்பொருள் ஆயர் சேரியில் புகுந்து அங்கே ஆயர்குலமங்கையான யசோதையின் கைபால் உரலோடு கட்டுண்டுஏங்கியழுதஇருப்பைப்பாடவாரம்பித்து அவ்வனுபவ பரீவாஹம் தம்மையே சூழ்ந்து இழுத்துச் செல்ல, பவக் கடலையும் நொடிப்பொழுதில் கடந்து நம்மையுங்கடக்கச் செய்யும் பராங்குசர் க்ருஷ்ணவதார பால லீலானுபவ பரீவாஹத்தைக் கடக்கவும் மாட்டாது கடக்க விருப்பமும் அற்று தேனும் பாலும் கன்னலும் அமுதுமொத்த அநுபவமாகிய உரலோடு கட்டுண்ட எளிமையை நெஞ்சரம் குழைந்து அநுபவிக்கும் போது அவ்வெளிமையிலேயே பரமன் தன்னுடைய அருமையையும் ஒருங்கே வெளிப்படுத்தும் தன்மையைக் கண்டார். மனங்கனிந்தார். 'எத்திறம்' என்று ஆறுமாத காலம் மோஹித்துக் கிடந்தார் என்று பெரியோர் பணித்தருள்வர். வேதம் தமிழ் செய்த பெருமாளாகிய ஆழ்வாரையும் மோஹித்துக் கிடக்கும்படி செய்த அநுபவம் நிறைந்த அமுதப்பாடல் வருமாறு —

'பத்துடையடியவர்க் கெளியவன்
பிறர்களுக் கரிய
வித்தகன், மலர் மகள் விரும்பும்
நம் அரும் பெறலடிகள்
மத்துறு கடை வெண்ணெய்
களவினில்உரவிடையாப்புண்டு
எத்திறமுரலினோடு
இணைந்திருந்தேங்கிய வெளிவே'

ஆழ்வாரையும் மோஹித்துவிழும்படிசெய்த அப்படிப்பட்ட விஷயம் யாது? என்பதையும் அதை இப்பாட்டில் ஆழ்வார் எவ்வாறு அருளிச் செய்திருக்கிறார் என்பதையும் சற்று ஆராய்ந்து இன்புறுவோம்.

இப்பாட்டின் முதலிரண்டடிகளில் எம்பெருமான் தன்னிடம் உள்ளன்புடன் பற்றுள்ளவர்களுக்கும் பத்தியுள்ளவர்களுக்கும் மிகவும் எளியவன்; ஆனால் தன்னிடம் பற்றுதலோ பத்தியோ யாதும் இல்லாத பிறர்க்கு அரியவன். காண்பதற்கும் அறிவதற்கும் மிக அரியவன், என்று பகவானுக்கு மிகப்பொதுவான திருக்குணங்களை அருளிச் செய்கிறார். மேலும் அவ்வெம்பெருமான் கருணை, ஐச்வர்யம், அழகு, மார்த்தவம் முதலியவைகளுக்கு இருப்பிடமான பெரிய பிராட்டியார் விரும்பியடையும் பரம புருஷன், எல்லையற்ற கல்யாண குணங்களையுடையவன், அவனையடை

மாகையால் தப: என்கிற ஶப்தத்தினால் சொல்லப்பட்ட பரப்ரஹ்மத்தை த்யாநம்செய்து, தபஸ்ஸில் ஆசையுள்ள தன் குருவான நாரதரை த்யாநித்து என்றதால் பகவானுடைய த்யாநம் ஆசார்யத்யாநம் இரண்டும் சொல்லப்பட்டது. இதைத்தான் 'தபஸ்ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம் । நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர்முநிபுங்கவம் ॥' என்றார்.

தல் யாவருக்கும் எளிதில் கிட்டாது என்று சொல்லியருளி; அவனை யடைந்தால் கருணை யே செய்வன், திருமகளோடு ஒரு காலும் பிரியாத நாதனை அவனே யடையத் தகுந்த வன், அவனே ஸர்வேச்வரன் என்பதையும் குறிப்பால் உணர்த்துகிறார். அதன் பிறகு பன்னிரண்டடிகளில் பகவானுடையஸௌலப் யத்தைப் பேசுகிறார். யாவரினும் மேம்பட்ட பரனாக இருந்தால் யாவரும் கிட்டிச் சென்று ஆச்ரயித்தல் அனுபவித்தல் கூடுமோ என்ற சங்கையைப் பரிஹரிக்கிறார். மத்தினால் உறுத் திக் கடையப்பட்ட வெண்ணெயைக் களவு செய்ததற்காக அவ்வெண்ணெயைக் களவு செய்யும் போதே ஆய்ச்சியால் தனது மார்ப கத்தே கட்டுண்ட எளிமையையும், தன்னுடன் சேர்த்துக் கட்டப்பட்ட உரலோடு இணைந்து இருந்து ஏங்கியழுத தன்மையையும் நினைந் துருகியனுபவிக்கும் போது ஆழ்வாருக்கு ஒரு சங்கை ஏற்படுகிறது பத்துடையடியவர்க் கெளியவனாகியவெம்பெருமான் யசோதையின் கைகளால் கட்டுண்டானே. ஆதலின் அவள் பற்றுடையடியவளோ? பற்றுடையடியவளாக விருந்தால் அவன் எம்பெருமானென்று அறி யாளோ? ஸ்ரீக்ருஷ்ணனுடையவிபவாவதாரத் தில் வியாஸர் நாரதர் முதலியோர் அறிந்து கொள்ள வில்லையா? எம்பெருமானென்று அறிந்தால் யசோதை அவனைக்கட்டத்துணி வாளோ? ஆனால் அவள் பற்றில்லாத அயலா ராக இருந்தால் எம்பெருமான் அவளிடம் கட் டுப்படுவானோ? இவையெல்லாம் எல்லையற்ற மாயாவினோதனுடைய மாயாஸமுத்திரமாக வல்லவோ இருக்கின்றன! பரமன் கட்டுப்பட் டகாரணம் எது? பரமன் கட்டுப்பட்ட இத்தன் மை பாசுரத்தின் முதலிரண்டடிகளில் சொல் லப்பட்டவைகளில் எதில் சேர்ந்தது? என் றிப்படிக்கரைந்துருகினார் ஆழ்வார். கிடந் தார் மோஹித்து. ஆறுமாதம் கழித்து எழுந் தார். மோஹித்த நிலையிலேயே ப்ரஞாநுபவம் பண்ணிக் கொண்டு ஆறுமாதமும் அவ்வநு பவமே உண்ணுஞ் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையுமெல்லாமாகக் கொண்டு கிடந்தார். ஆழ்வாரின் அறிவின் சோதி அமு தவெள்ளத்திற்கு இலக்காகாத பொருளும் உண்டோ? தெளிந்தார் ஆழ்வார்! என்ன? யசோதை க்ருஷ்ணனிடத்துப் பற்று மிகுந்த வள்தான். ஆனால் அது தன் பிள்ளை யென்ற ப்ராக்ருதமான பற்று. ஆனால் அது மிகமிக அதிகமான பற்றுதான். அதனால்தான் தன் பிள்ளை வெண்ணெயைக்களவு செய்து ஊராரி டம் பழிச்சொல்லும் உடம்பு நோயும் பெற்று வருந்தாதிருக்கவேண்டுமே, என்று நினைத்தே கட்டினாள். பற்றுள்ளவளானாலும் அடியவள ல்ல. அடியவளானால் கட்டமாட்டாள். பரமனை யறிந்து கொண்டிருப்பாள். வெண்ணெயுண் டவயிறு மண்ணையும் விண்ணையும் தன்னுள்ள டக்குமென அறிந்திருப்பாள். பற்றுமுடைய வள். அடியவளுமல்லள். அப்படியில்லாதகார ணம் அவள் பற்றுள்ள அடியவளாக இருக்க வேண்டுமென்று அவன் பற்றுவைக்காமையே. அஃதிருக்க,உரலோடுஇணைந்திருந்தேங்கியது ஏன்? ஆச்ரித பக்ஷபாதியல்லவா? தன்னை விரும்பியடைந்த மலர்மகள் உறையுமிடமாகிய தன் மார்பகத்தே இக்கயிறு பிணிக்கும்படி யாகி விட்டதே, என்று ஏங்கினான். மேலும் மிகமிக ஸௌலப்யத்தை விளக்கும் தன்னு டைய இந்த நிலைமையைத்தன்னுடன் சேர்ந்து அணைந்தனுபவிக்கும் பெருமை இவ்வுரலுக்கு இருந்ததேயன்றித் தன்னை அருமைப் பிள்ளை யாக பாவிக்கும் யசோதைக் கில்லையே. தன்னைப் பரமனென்று அறிய முடியாத அள விலே இவ்வுரலுக்கும் யசோதைக்கும் வாசி யேயில்லையே. அப்படியிருப்பினும்,தன்னுடன் தற்போது இணைந்திருந்தனுபவிக்கும் பேறு இவ்வுரல் பெற்றஅளவு தான்பெறுவதற்குரிய ஸத்கர்ம விசேஷம் தன் தாய்க்கில்லையே என் றிவைகளை நினைந்தேங்கினான். பற்றுடையடிய வர்க்கெளியவனும்,பிறர்களுக்கரியவனுமாகிய வெம்பெருமான் தன்னிடத்தில்பற்றுவைக்கக் கூடிய அறிவுமில்லாத உரலோடு இணைந்திரு ந்துஎளியனாயும், தன்னிடம் பற்றுள்ள யசோ தைக்குத் தான் இன்னான் என்று அறியாத வகையில் அவளுக்கு அரியனாகவும் இருந்த தன்மை ‘பத்துடையடியவர்’ பாசுரத்தின் முன்னிரண்டடிகளில் கூறப்பட பொது விலக் கணத்திற்கு எப்படிப்பொருந்துகிறது என்று நினைந்து நினைந்து நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று சோர்ந்து ஆழ்வார் மால் கொண்டு கிடந்தார். தெளிந்தார்! நமக்கும் அதைக் கருணையுடன் உபதேசிக்கிறார். இவ்வனுப வத்தினால் நாமும் மோஹித்து விழலாம். ஆனால் ஆழ்வாருடைய மனோ நிலையைப் போன்ற பரிபக்வ தசையில் இருந்தாலல்ல வோ? அந்நிலை நமக்கு என்று எய்துமோ? கண் ணன் கருணையும் வாழ்க. ஆழ்வார் அடிகள் வாழ்க. அவர் அகமகிழ்ந்து அன்புடன் அரு ளிய அநுபவப் பேரின்ப வெள்ளமும் வாழ்க!

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் பெங்களூர் விஜயம்

வழக்கம் போல் காலை 8 மணிக்குள் அபிகமன ஆராதனமும் வேத பாராயணமும் முடிந்து விட்டது. உடனே பெங்களூர் கண்டோர்மண்டில் (தண்டு) உள்ள ராமன் ஸந்நிதியிலிருந்து (24–10–53 ல் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த இடம்.) பல்லக்கில் பெருமாள் முன்பு எழுந்தருள, பின்பு அநுயாத்ரையாக ஸஞ்சார பல்லக்கில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளினார். மைஸூர் பாங்கி ஸர்க்கிளில் ஸ்ரீ அழகியசிங்கரை எதிர் கொண்டு அழைப்பதற்கு ஸ்த்ரீ பால வ்ருத்தர்கள் உள்பட ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் கூடியிருந்தார்கள். அங்கு ஒரு பந்தலும் போடப்பட்டிருந்தது. அவ்விடத்தில் கூடியிருந்தோர் ஸ்ரீ அழகியசிங்கர் வரவை சாதகம்போல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவ்வமயம் ஒரு சப்தம் ஒலித்தது. என்ன ஒலி? திருச்சின்ன ஒலி! என்னென்று ஒலித்தது?

‘அனைத்துலகும் காக்குமரு ளாளர் வந்தா
ரனைத்துக்கு மதிபதியாய் நிற்பார் வந்தார்
தினைத்தனையுந் திருமகளை விடாதார் வந்தார்
தேசோத்தார் மிக்காரு மில்லார் வந்தார்
நினைக்க நமக் கின்னறிவு தந்தார் வந்தார்
நிலைநின்ற வுயிர் தோன்ற நினைந்தார் வந்தா
ரெனக்கிவர்நா னிவர்க்கேன்ன வினியார் வந்தா
ரேழுத்தோன்றிற் றிகழநின்றார் வந்தார் தாமே’ என்று.

இவ்விதம் சப்திக்கும் மாலோலன் திருச்சின்ன ஓசை இனிமை மற்றைத் தேவர்க்கு உண்டோ என்று படித்த இரு பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வெகு ஸமீபத்தில் மாலோலனும் எழுந்தருளிவிட்டார். அங்கு கூடியிருந்தவர்களில் முக்யமாக ஸ்ரீமான்கள் V. V. ஸ்ரீநிவாஸஐயங்கார் (சென்னை) ஸ்ரீ S. K. வெங்கடரங்கம் ஸ்ரீ V. நாராயணஐயங்கார், ஸ்ரீ V. கோபாலஸாமிஐயங்கார் (வரவேற்பு கமிட்டிக் காரியதர்சி) ஸ்ரீ ராமண்ணா, ஸ்ரீ ராமஸ்வாமிஐயங்கார், ஸ்ரீ பத்ராவதி வீரராகவாசாரியர் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸமீபம் சென்று பூர்ணகும்பத்துடன் வரவேற்றனர். உடனே ராஜ ப்ரமுகருடைய ப்ரதிநிதியாக, பெங்களூர் கார்ப்ரேஷன் மேயர் ஸ்ரீ P. ஹநுமந்தய்யா, கார்ப்ரேஷன் கமிஷனர் ஹெஞ்சப்பா, பெங்களூர் ஸப்டிவிஷனல் ஆபீஸர், வடபெங்களூர் அமீல்தார் ஸ்ரீ அஞ்சுண்டப்பா முதலியோர் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்றனர். அப்பொழுது ஸ்ரீ ஸன்னிதி ஸ்ரீகார்யம் தையார். ஜோஸ்யம். வித்வான். ரங்காசார் ஸ்வாமி மேயர் முதலியவர்களை ஸ்ரீ அழகியசிங்கருக்கு அறிமுகப்படுத்திவைத்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவர்களை ஸாபிப்ராய ஸ்மிதங்களினாலும், ஸ்வாகத ஸூசகாவலோகநங்களினாலும், ப்ரியபாஷணங்களினாலும் ஆதரித்தருளினார். பிறகு அங்குள்ளவர்களுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ அழகியசிங்கர் பஞ்சகலசங்கள் வைக்கப்பட்ட கர்னாடக பல்லக்கிற்கு (அட்டப்பல்லக்கு) எழுந்தருளினார். அங்கிருந்து ஸகல முதல் வகுப்பு மரியாதைகளுடன் புறப்பட்டு ஸுமார் இரண்டு மையில் தூரத்திலுள்ள துளஸித்தோட்டத்திற்கு எழுந்தருளினார். ஆஸ்திகர்கள் வழிநெடு

வதும் திரள் திரளாகக்கூடி இருந்து ஸ்ரீ அழகியசிங்கரை வணங்கி வழிபட்டார்கள். துளஸிவநத்தின் வாயற்படியை யடைந்ததும் ஸ்ரீ அழகியசிங்கர் பல்லக்கினின்றும் இரங்கினர். அங்கு கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீஸந்தான க்ருஷ்ண ஸ்வாமி கோயில் துறையார்கள் கோயில் மரியாதைகளுடன் ஸ்ரீ-அழகியசிங்கரை வரவேற்றனர். ஸ்ரீ அழகியசிங்கரும் கோயிலுக்குள் சென்று கண்ணனை மங்களாசாஸநம் செய்து வெளி மண்டபத்தில் சித்ராஸநத்தில் வீற்றிருந்தார். இரண்டு மையில் தூரம் அஞ்ஜலி செய்து வந்தஸ்ரீஹநுமந்தய்யாவும் ஸ்ரீஅழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பித்து நின்றார்.

பிறகு ஸ்ரீ S. K. வெங்கடரங்கம் (அட்வொகேட்) ஸ்ரீ அஹோபிலமடம் நம் தேசத்திற்கு முக்யமானதென்றும், இம்மடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீஆதிவண்சடகோப ஸ்வாமியின் அவதாரஸ்தலம் நம் தேசத்தில் உள்ளது என்றும், ஸ்ரீஆதிவண்சடகோப ஸ்வாமியை ஸேவிப்பதற்கு திருநாராயணபுரம் எழுந்தருள உத்தேசித்து மார்காஸத்யா ஸ்ரீஅழகியசிங்கர் நம்முடைய நகரத்திற்கு வந்திருக்கிறாராகையால் நாம் மிகவும் உத்ஸாஹத்துடன் வரவேற்போம் என்றும், ஸ்ரீஸந்நிதியில் நடந்துவரும் தர்ம கார்யங்களைப்பற்றியும், முக்யமாக மதுராந்தக கலாசாலையைப்பற்றியும், ஸ்ரீ அழகிய சிங்கரின் வைராக்யாதி ஸகல குணங்களைப்பற்றியும் குழாங்களாய்க் கூடியிருந்தோருக்கு கன்னட பாஷையில் விரிவாகக் கூறினர்.

பிறகு ஹநுமந்தய்யா (மேயர்) பேசுகையில் நகர மக்களுக்கு இன்றுளே நன்னாள் என்றும், என்னாளில் இன்னாள் கிடைக்கப் பெற்றது என்னுடைய பாக்ய விசேஷம் என்றும், **'साधूनां दर्शनं पुण्यम्......'** என்றும், இம்மஹான் பூர்வாச்ரமத்தில் லக்ஷாதிபதியாக இருந்தும் அவைகளைத் துறந்து, ஐஹிக போகங்களில் பற்றற்று இந்த பீடத்திற்கு வந்திருப்பதாக கேள்விப் படுகிறேன்; மிக்க ஸந்தோஷம். உங்கள் வரவு எங்கள் ராஜ்யத்திற்கு நல்வரவாகுக. உங்கள் ஆசீர்வாதத்தால் நாங்களும் எங்கள் ராஜ்யமும் நன்றாக இருக்கவேண்டுமென்றும் பேசி முடித்தார்.

ஸ்ரீஅழகியசிங்கரும் அவர்களைப் பார்த்து 'உங்களுடையவும், உங்கள் தேசத்தவர்களுடையவும், தெய்வ பக்தியையும், ஆஸ்த்திக்யத்தையும் கண்டு அகமகிழ்கிறேன். பகவானுடைய அநுக்ரஹத்தினால் உங்கள் எல்லோருக்கும் நன்மை உண்டாகட்டும். லோகோஜ்ஜீவநார்த்தம் பெருமாள் ஆங்காங்கு ஸஞ்சாரமாக எழுந்தருளுகிறார். ஆகையால் அனைத்துலகும் வாழவந்த ஆதிநரசிங்கனடியை தினைத்தனையும் மறவாமல் நல் வாழ்வு வாழ்வீர்களாக' என்று ஸாதிக்கும்படியிருந்தது.

பிறகு ஸ்ரீகார்யம்ஸ்வாமி அங்குவந்திருந்த அதிகாரிகளுக்கும், முக்யஸ்தர்களுக்கும் பூர்ணபலம் (இரட்டைத்தேங்காய்)கொடுத்து நன்றி கூறியனுப்பினர். அன்றைய தினம் பெருமாளுக்கு அரசாங்கத்தாருடைய ஆராதநம் நடைபெற்றது.

புரிசை. நடாதூர். க்ருஷ்ணதாஸன்.

ஸ்ரீ:

புத்தகவிமர்சனம்

Srimad Bhagavad Gita:— (Vol-1)

ப்ரசுரம்:— ஸ்ரீகீதாமிஷன் & ஸ்ரீ கிருஷ்ண ஸபை, மாதுங்கா, பம்பாய் 19. விலை 1–0–0

ஆங்கிலமொழிபெயர்ப்பாளர்:— ஸ்ரீ. உப. A. S. ஐயங்கார் ஸ்வாமி.

இக்காலத்தில் ஸ்ரீமத்பகவத்கீதை ஆங்கிலமொழிபெயர்ப்புடனும், தமிழ்மொழி பெயர்ப்புடனும் வெளிவந்திருந்த போதிலும் பெரும்பாலும் அவைகள் அத்வைத மதத்தைப் பின்பற்றினவைகளே. ஸ்ரீராமாநுஜதர்சனமென்ற விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைத் தழுவினதான ஆங்கிலமொழி பெயர்ப்பு இக்காலத்தில்மிகவும் அவச்யமே. அந்த அவச்யத்தை இப்புத்தகம் பூர்த்தி செய்வதைக் குறித்து ஸந்தோஷிக்கிறோம். புத்தகம் சிறியதாகவும், அழகாகவும், மலிவாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ அபர்யாப்தாம்ருதத்யாநஸோபாநம்

ஸ்ரீ திருக்குடந்தைதேசிகன் என்கிற ஸ்ரீமத் கோபாலதேசிகன் அருளிச்செய்தது.

ப்ரசுரம்:— ஸ்ரீபராங்குசபக்தஸபை, திருக்குடந்தை. விலை 1–4–0

இதற்கு இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி மணிப்ரவாளத்தில் ஓர் உரையும் எழுதி இணைத்திருக்கிறார்.

ஒவ்வொரு ச்லோகமும் பதவுரை கருத்து இவைகளுடன் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்க்ருத ச்லோகங்கள் தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அழகிய படங்களும் காணப்படுகின்றன. ஆழ்வார்கள் ஸ்ரீஆராவமுதனை மங்களாசாஸனம் செய்த பாசுரங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தமிழ் உரை அழகிய கருத்துக்களுடனும் தெளிவாகவும் இயற்றப்பட்டிருப்பது மிகவும் ஸந்தோஷப்படக்

திருக்குடந்தை ஸ்ரீசார்ங்கராஜ வைபவம்

இயற்றியவர்;— இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி.

ப்ரசுரம்:— திருக்குடந்தை ஸ்ரீசார்ங்கபாணி தேவஸ்தான மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபால அய்யங்கார் ஸ்வாமி. விலை 0–12–0.

திருக்குடந்தை ஸ்ரீகோமளவல்லி, ஆராவமுதன் விஷயமான இப்ரபந்தம் ஓர் உயர்ந்த ஸ்தலபுராணமாக அமைந்திருக்கிறது. திருக்குடந்தை திருக்கோயில்கள்விஷயமாக பலவித விஷயங்கள் குறித்திருப்பது போற்றத்தக்கதே. அழகிய படங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தில் 46-வது பக்கத்தில் ஆழ்வார்கள் ஸன்னிதிகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறது. ப்ராசீனமாகவே கலியன் ஸன்னிதி ஸ்ரீஅஹோபிலமடத்தின் நிர்வாஹத்திலிருப்பதும் ஸ்ரீஅஹோபிலமடத்தின் பின்புறமே சேர்ந்தாற்போலவே திருமங்கைமன்னன் ஸன்னிதியிணைத்திருபதும்யாவரும் அறிந்த விஷயங்களே. அப்படியிருக்க ஆழ்வார்களின் ஸன்னிதிக்குறிப்பில் திருமங்கைமன்னன் இடம்பெறுதது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

திருக்குடந்தை திருக்கோயில்கள் பல அறிய பழக்கவழக்கங்கள் இப்புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமே. ஆனாலும் புரட்டாசிக் கேட்டையன்று ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் விசேஷமான மங்களாசாஸனம் ஸ்ரீஆராவமுதன் ஸன்னிதியில் நடந்து வந்திருக்கிறது. ஏதோ சில காரணங்களால் திருக்கேட்டை திருவீதி உத்ஸவம் தாத்காலிகமாக நின்றிருக்கிறது. ஆனால் பழைய வழக்கங்களைக் காண்பிக்குமிப்புத்தகத்தில் இந்த ப்ராசீன வழக்கமும் இடம் பெறவில்லை யென்பது ஆச்சர்யமே!

மற்[illegible]படி மிகவும் ச்ரத்தையுடன் எழுதப்[illegible]

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைத வேதாந்த கோசம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசாரியர். M.O.L.
(D. T. தாதாசாரியர்)

விலை ரூபாய் 20—0—0.

கிடைக்குமிடம்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் முக்யமானது. இதில் 107 புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட அனேக பதங்களுக்கு விசிஷ்டாத்வைத ரீதியில் அப்புத்தகங்களிலுள்ள வ்யாக்யானப்படி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின் இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒரு நிகண்டு (அகராதி)வாகத் திகழ்கிறது என்னலாம். 374 பக்கங்கள் உள்ளன. 500 காபிகளே கைவசமிருப்பதால் இப்புஸ்தகத்தை விரும்புவோர்கள் முந்திக்கொள்ளவேணும். புஸ்தகம் நல்ல பயிண்டுடன் கூடியிருக்கிறது.

ஸ்ரீ:

நித்யாநுஸந்தானம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸ்ரீஅஹோபிலமடம் ஸந்நிதியில் காலை விச்வரூபம் முதற்கொண்டு ராத்ரி திருவாராதனமுடிவுபர்யந்தம் அநுஸந்திக்கப்பட்டுவரும் ஸேவாக்ரமங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணு 9.

கிடைக்குமிடம் ;—

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ், திருவுள்ளூர்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobila-
-mutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Edited by Sri P. S. Srinivasa Desikachariar M. A., B. L.